# தமிழி

## தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

### செய்திமலர்

### பிப்ரவரி 2020 - அக்டோபர் 2020



# தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கு நன்றியும் பாராட்டும்

தமிழ்ப்பல்கலைக் கழகத்திற்கு பல்துறைசார் அறிஞர்களையும், தமிழ் எழுத்தாளர்களையும் சிறப்பு நிலையில் அழைத்து அவர்களின் அறிவாற்றலையும், அனுபவங்களையும், மாணவர்களும் ஆய்வாளர்களும் பயன்கொள்ளும் சிறப்புத் திட்டம் ஒன்றினை தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கோ. பாலசுப்ரமணியன் அவர்கள் கருத்துருவாக தமிழ்நாடு அரசுக்கு அனுப்பினார். தமிழ்நாடு அரசு, தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத் துறை வாயிலாக இதனை ஏற்று அறிவித்தது. அதன் அடிப்படையில் ஐந்து அறிஞர்களை வருகைதரு பேராசிரியர்களாகவும், ஐந்து படைப்பாளர்களை வருகைதரு இலக்கிய ஆளுமைகளாகவும் தமிழ்ப்பல்கலைக்கழகம் நியமித்துள்ளது.



கோ. பாலசுப்ரமணியன்

## வருகைதரு இலக்கிய ஆளுமைகள்



**சி.எம். முத்து**

தஞ்சை வட்டார வாழ்வைத் தன் படைப்புகள் வழி பதிவு செய்துள்ள எழுத்தாளர், கறிச்சோறு, நெஞ்சின் நடுவே, வேரடி மண், அப்பா என்றொரு மனிதர், மிராசு முதலான நாவல்களையும நூற்றுக்கணக்கான சிறுகதைகளையும் எழுதியுள்ளவர்.



**கீரனூர் ஜாஹிர் ராஜா**

தமிழ் இஸ்லாமிய மக்களின் வாழ்வியலை எழுதி வரும் எழுத்தாளர், மீன்காரத்தெரு, கருத்தலெப்பை, ஞாயிறு கடை உண்டு, ஜின்னாவின் டைரி, சாமானியரைப்பற்றிய குறிப்புகள் முதலான நாவல்களையும், நூற்றுக்கணக்கானச் சிறுகதைகளையும் எழுதி உள்ளவர்.



**பாமா**

தமிழ் தலித் இலக்கிய முன்னோடி. பெண்மைய எழுத்தாளர். கருக்கு, சங்கதி. மனுஷி முதலான நாவல்கள், சிறுகதைகள், குறுநாவல்கள் எழுதி உள்ளவர்.



**ஸ்ரீதர கணேசன்**

தென்தமிழக கரற்கரையோர அடித்தள மக்களின் வாழ்வியலை எழுதி வரும் எழுத்தாளர். உப்புவயல், சந்தி, வாங்கல், சடையன் குளம் முதலான நாவல்களையும் பல சிறுகதைகளையும் படைத்துள்ளார்.



**ரவி சுப்ரமணியன்**

நவீனத் தமிழ்க் கவிஞர். ஒப்பனை முகங்கள், காத்திருப்பு, சீம்பாலில் அருந்திய நஞ்சு, விதானத்துச் சித்திரம் முதலான கவிதைத் தொகுப்புகளையும் பல எழுத்தாளர்கள் குறித்த நூல்களையும் பல ஆவணப் படங்களையும் தந்துள்ளார்.

## வருகைதரு பேராசிரியர்கள்



**முனைவர் ந.முத்துமோகன்**

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் சமயம், தத்துவம், மனிதவியல் சிந்தனைப் புலத்தின் மேனாள் தலைவர் மற்றும் தத்துவப் பேராசிரியர்.



**முனைவர் எல். இராமமூர்த்தி**

மொழியியல் பேராசிரியர். நடுவண் அரசின் இந்திய மொழிகள் நடுவண் நிறுவன மேனாள் ஆராய்ச்சி அலுவலர்.



**திரு. பிரளயன்**

நவீன நாடக இயக்க முன்னோடி.உபகதை, இடம், அன்றும் இன்றும், பாரிபடுகளம், வஞ்சியர் காண்டம் போன்ற புகழ்பெற்ற நாடகங்களை உருவாக்கியவர்.



**முனைவர் வி. வேதாசலம்**

வரலாற்று தொல்லியல் ஆய்வாளர்.தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை மேனாள் அலுவலர்.



**மருத்துவர் கு.நரேந்திரன்**

மருத்துவ நிபுணர். சிறந்த மருத்துவக் கட்டுரைகளை அறிவியல் தமிழுக்குக் கொடையாகத் தந்துள்ளவர்.

கனிந்த இலக்கிய ஆளுமைகளையும் தோய்ந்த தமிழாய்வு அறிஞர்களையும் நியமித்துச் சிறப்பித்தமைக்காக தமிழ் இலக்கிய உலகம், துணைவேந்தர் அவர்களுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொண்டுள்ளதோடு, ஆண்டுதோறும் இந்தப் பணி தொடர்ந்திட வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறது. அனைவருக்கும் 'காக்கைச் சிறகினிலே' சார்பில் நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.

–ஆசிரியர்

நன்றி: காக்கைச் சிறகினிலே இதழ்

குறிப்பு: இதழின் பக்கம் அப்படியே மறுஅச்சு செய்யப்பட்டுள்ளது.

# தமிழி

**தமிழ்ப் பல்கலைக்கழகச் செய்திமலர்**

**பிப்ரவரி 2020 - அக்டோபர் 2020**

பதிப்பாசிரியர்
பேராசிரியர் கோ.பாலசுப்ரமணியன்
துணைவேந்தர்

பொறுப்பாசிரியர்கள்
முனைவர் தெ.வெற்றிச்செல்வன்
உதவிப் பேராசிரியர்
அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை

முனைவர் மா.அறிவானந்தன்
உதவிப் பேராசிரியர்
சமூகஅறிவியல் துறை

ஒளிப்படங்கள்
கேள்வி - காட்சி மையம்

தரவாக்கம்
மக்கள் தொடர்ப்புப் பிரிவு

மலரழகு
மு.திருநாவுக்கரசு

வெளியீடு
பதிப்புத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

மின்னஞ்சல்
thamizhitu@gmail.com
இணையதளம்
www.tamiluniversity.ac.in


## தலையங்கம்

வணக்கம். கொரோனா தீ நுண்மி காரணமாக, நீண்ட விடுமுறைக்குப் பின், தமிழி இப்போது உங்கள் கைகளில்.

புறத்தில் எத்தகைய நச்சு சூழ்ந்தாலும் அகத்தூய்மையும் விழிப்பும் இருப்பின், அவற்றை எதிர்கொள்ளத் தாங்குதிறனோடு போராட முடியும். எனவே, எவ்வகை நச்சாயினும் நம்மைக் கடந்து போகட்டும். விழிப்போடு அகப் புறத்தூய்மை பேணுவோம். நச்சுப் பரவல் காலத்திலும் நாம் தளராமல் தொடர்ந்து, பல்கலைக்கழகப் பணிகளை முன்னெடுத்து வந்திருக்கிறோம். 25 இணையவழி உரைத்தொடர்கள், இணையவழித் துறைக்கருத்தரங்குகள் / பயிலரங்குகள், வாய்மொழித் தேர்வுகள், பதிப்புத்துறை நூல்விற்பனை எனத் தொடர் இயக்கம் நிறைவளிக்கிறது. தமிழி தொகுத்துத் தந்திருக்கிற செயன்மைகளைப் பார்க்கிறபோது, எந்தக்காலத்திலும் பணிகளை நாம் தொடர்வோம் என்கிற நம்பிக்கை கூடியிருக்கிறது.

பட்டறிவும் படைப்புப் புலமையும் உடையவர்கள் எல்லாக் காலங்களிலும் ஒரு சமூகத்தின் உயிரோட்டத்திற்குப் பங்களித்துக் கொண்டேயிருக்கிறார்கள். அவ்வகையில் 5 இலக்கிய ஆளுமைகளையும் 5 வருகைதரு பேராசிரியர்களையும் தமிழ்ப் பல்கலைக்கழகம் பயன்படுத்திக் கொள்வதில் பெருமிதம் கொள்கிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையின் செம்மொழித்தமிழ் (3240 படிகள்) நூல் 45 நாட்களில் விற்றுத்தீர்ந்து சாதனை படைத்திருக்கிறது. இந்த நூலுக்கான வரவேற்பு, தமிழகத்தில் தமிழுணர்வு மேலோங்கி வருகிறது என்பதைக் காட்டுகிறது. இந்நூல் விரைவில் செம்பதிப்பாக வெளிவர இருக்கிறது.

பதிப்புத்துறையின் நூல் விற்பனை இலக்கு, கடந்த காலங்களில் அதிக பட்சமாக 3 இலட்சங்களைத் தொட்டிருந்த நிலையிலிருந்து, இந்த ஆண்டு கொரோனா இடரிலும் முடக்கத்திலும் 17.50 லட்சங்களுக்கு விற்கப்பட்டு, புதிய சாதனையை எட்டியுள்ளது. பணிகள் தொடர் கின்றன. உங்கள் எல்லோரின் ஒத்துழைப்போடும் தொடர்வோம்.

வாழ்க தமிழ். வளர்க தமிழ்ப் பல்கலைக்கழகம்.

முனைவர் கோ.பாலசுப்ரமணியன்

# வேதாத்திரி மகரிஷி அறக்கட்டளைக் கருத்தரங்கம்

தமிழ்ப் பல்கலைக்கழக மெய்யியல் துறை சார்பாக, 11.02.2020 அன்று வேதாத்திரி மகரிஷி அறக்கட்டளைக் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் மொழிப்புல முதன்மையர் முனைவர் இரா.காமராசு தலைமையேற்றார். மெய்யியல் துறைத்தலைவர் முனைவர் பி. பாலச்சந்திரன் வரவேற்புரையாற்ற, தஞ்சை மனவளக்கலை மன்ற முதுநிலைப் பேராசிரியர் அருள்நிதி கு. சரவணன் வாழ்த்துரை வழங்கினார். மதுரை மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி நா. ஸ்ரீராம், 'மனதில் அமைவதெல்லாம்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். மெய்யியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பொ. சுரேஷ் நன்றி கூறினார்.

தமிழ்ப் பல்கலைக்கழக மெய்யியல் துறை சார் பாக, 11.02.2020 அன்று வள்ளலார் அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெற்றது. மொழிப்புல முதன்மையர் முனைவர் இரா. காமராசு தலைமை ஏற்ற இக்கருத்தரங்கில், மெய்யியல் துறைத்தலைவர் முனைவர் பி. பாலச்சந்திரன் வரவேற்புரையாற்ற, தஞ்சாவூர் அருட்பெருஞ்ஜோதிச் செயலர் திரு பா. தம்பையா வாழ்த்துரை வழங்கினார். மயிலாடுதுறை தருமபுர ஆதினம் கலைக்கல்லூரி மேனாள் பேராசிரியர் முனைவர் மு. சிவச்சந்திரன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். மெய்யியல்துறை, உதவிப்பேராசிரியர் முனைவர் தி. பார்த்திபன் நன்றி கூறினார்.






# அறிவியல் முறைப்படி உயிர்ப் பன்மையைப் பாதுகாப்பது அவசியம்

தமிழ்ப் பல்கலைக்கழக, சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை சார்பில், சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர்ப் பாதுகாப்பில் நவீன அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்கள் குறித்த தேசியக் கருத்தரங்கம் 03.03.2020 அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமை வகித்தார். இன்றைய உலகத்தின் சுற்றுச் சூழல் சவால்களில் முதன்மையானது, பல்லுயிர்ப் பாதுகாப்பு என்பது, அறிஞர்களின் முடிவு. உலகம் என்பது உயிரற்ற பொருள்களால் மட்டுமல்ல உயிர்களிலேயே அது அறியப்படுகிறது. அனைத்து ஜீவராசிகளின் உயிரைப் பொறுத்தே சிறப்புப்பெற்ற உயிர்க் கோளமாகத் திகழ்கிறது. 1.20 கோடி முதல் 1.50 கோடி வரை உலக உயிர்கள் உள்ளன என்று ஒரு கணக்கீடும் 5 கோடி வரையில் உலக உயிர்கள் உள்ளன என மற்றொரு புள்ளி விவரமும் கூறுகின்றன. இதில் மனிதன் அறிந்து ஆய்வு செய்தது 17.5 லட்சம் உயிரினங்கள் மட்டுமே. இந்தியாவைப் பொறுத்தவரை 50,000 தாவர இனங்களும் 80,000 விலங்கினங்களும் அறியப்பட்டுள்ளன. இந்தியாவுக்கு என்றே தனித்துவம் நிறைந்ததாக 7000 தாவர இனங்கள் உள்ளன. மருந்துக்காகவும் சூழல் சமநிலை, இயற்கை மேம் பாட்டுக்காகவும் நாம் உயிர்ப் பன்மையைக் காப்பாற்றியே தீரவேண்டும். நவீன அறிவியலின் துணைகொண்டு, உயிர்ப் பன்மையை அதன் இருப்பிடத்திலேயே காப்பாற்றுவது, மனித முயற்சியால் காப்பாற்றுவது என, பல்வேறு வழிகளில் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர, மனித இனம் தோன்றிய காலம்தொட்டு இன்று வரை உயிர்ப் பன்மையைக் காப்பாற்ற, நடவடிக்கை எடுத்து வந்துள்ளதைத் தமிழ் இலக்கியங்கள் வாயிலாக, அறிகிறோம். மனித இனப்பெருக்கம் காரணமாக, வாழ்விடங்கள் அழிக்கப்படுவதால் சூழல் சீர்கேடு அதிகமாகிறது. இதன் காரணமாக, உயிர்ப் பன்மைப் பெருக்கம் தடுக்கப்படுவதுடன் அழிந்தும் வருகிறது. இதை ஆராய்ந்து அறிந்து,சீராக்க முற்படுவதே மனித குலம் தழைக்க ஒரே வழி. அறிவியல் ரீதியாகவும் சங்க இலக்கிய / தமிழ் இலக்கிய வழிமுறைகள் மூலமாகவும் உயிர்ப்பன்மை பாதுகாக்க முயல வேண்டும் என்று தெரிவித்தார், வனத்துறை அலுவலர் செல்வம். அவ்வையார் அரசு மகளிர் கல்லூரி, காரைக்கால், பேராசிரியர் சி. தி. பாஸ்கரன், பல்கலைக் கழக அறிவியல் புலத்தலைவர், பேரா. சங்கர் ஆகியோர் பேசினர். சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறைத் தலைவர், பேரா. கு. க. கவிதா வரவேற்றார். உதவிப்பேராசிரியர், முனைவர் த. ராகேஷ்சர்மா நன்றி கூறினார்.

# கணிப்பொறியில் தரவு பாதுகாக்கும் முறைகள்

தமிழ்ப் பல்கலைக்கழகக் கணிப்பொறி அறிவியல் துறை சார்பாக, 25.02.2020 அன்று 'தமிழ்க் கணிப்பொறியில் தரவு பாதுகாக்கும் முறைகள்' என்ற தலைப்பில் துறைக் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் துணைவேந்தர் தலைமையேற்றார். கணிப்பொறி அறிவியல் துறைத்தலைவர், முனைவர் ச. பாஸ்கரன் வரவேற்புரையாற்ற, தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிவாளர் (பொ.) முனைவர் கு. சின்னப்பன், அறிவியல் புலத்தலைவர் முனைவர் க. சங்கர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். புதுவைப் பல்கலைக்கழகக் கணிப்பொறி அறிவியல் துறைத் தலைவர் முனைவர் கோ. குமாரவேள், தஞ்சாவூர், பான்செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தகவல் தொழில் நுட்பவியல் துறைத் தலைவர் முனைவர் ரெ. சுகன்யா ஆகியோர் பொழிவு ஆற்றினார்கள். கணிப் பொறியியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் அ. செந்தில்குமார் நன்றி நவில, உதவிப் பேராசிரியர் முனைவர் அ. பா. கார்த்திக் ஆனந்த் பாபு தொகுப்புரை ஆற்றினார்.



# தொல்லியல் நோக்கில் தமிழக வரலாறு

தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை சார்பாக, 20.03.2020 அன்று தொல்லியல் நோக்கில் தமிழக வரலாறு - தேசியக் கருத்தரங்கம் துணைவேந்தர் தலைமையில் நடைபெற்றது. சுவடிப்புல முதன்மையர் முனைவர் பா.ஜெயக்குமார் வரவேற்றார். புதுவை மத்தியப் பல்கலைக்கழக, வரலாற்றுத்துறைப் பேராசிரியர் முனைவர் கா. இராஜன் சிறப்புரை ஆற்றினார். உதவிப்பேராசிரியர் முனைவர் ஆ. துளசேந்திரன் நன்றி நவில, உதவிப் பேராசிரியர் முனைவர் மா. பவானி தொகுப்புரை ஆற்றினார்.

தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை சார்பாக, 23.03.2020 அன்று சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. இச்சொற்பொழிவு நிகழ்விற்குத் துணைவேந்தர் தலைமையேற்றார். சுவடிப்புல முதன்மையர் முனைவர் பா. ஜெயக்குமார் வரவேற்புரையாற்ற, புதுச்சேரி பிரஞ்சு இந்தியவியல் ஆய்வு நிறுவனப் பேராசிரியர் முனைவர் எ. சுப்பராயலு, "தமிழக வரலாறும் விஜயநகரகாலக் கல்வெட்டுகளும்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். உதவிப் பேராசிரியர் முனைவர் மா. பவானி நன்றி நவில, கௌரவ உதவிப்பேராசிரியர் முனைவர் கு.மூகாம்பிகை தொகுப்புரை ஆற்றினார்.

## கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை சிறப்புச் சொற்பொழிவு

தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை சார்பாக, 12.03.2020 அன்று, நெ.து.சுந்தரவடிவேலு, புலவர் செ. இராசு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. துணைவேந்தர் தலைமை ஏற்றார். சுவடிப்புல முதன்மையர், முனைவர் பா. ஜெயக்குமார் வரவேற்புரையாற்ற, திண்டுக்கல், முனைவர் சங்கரலிங்கம் 'பாண்டிய நாட்டில் ராஜதந்திரம்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். உதவிப்பேராசிரியர் முனைவர் மா. பவானி நன்றி நவில, கௌரவ உதவிப் பேராசிரியர் முனைவர் கு. மூகாம்பிகை தொகுப்புரை ஆற்றினார்



# ஆட்சிமொழிச் சட்ட வாரம் - தொடக்கவிழா

தஞ்சாவூர் மாவட்டத்தில், தமிழ்வளர்ச்சித்துறை சார்பில், ஆட்சிமொழிச் சட்டவாரம் தொடங்கியதை ஒட்டி, முதல் நிகழ்வாகத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் 09.03.2020 அன்று, தொடக்க விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்குத் துணைவேந்தர் தலைமை வகித்துப் பேசுகையில், "தமிழ் தொன்மை மிக்க இலக்கியவளம் நிறைந்தமொழி. தாய்மொழியான தமிழை இன்றைய மாணவர்கள் விரும்பிக் கற்கவேண்டும். வேலை சார்ந்து பிறமொழிகளைக் கற்றாலும் தாய்மொழியின் மீது பற்றுக் கொண்டவர்களாக இளம் தலைமுறையினர் இருக்கவேண்டும்." மேலும், இந்த ஆட்சிமொழிச் சட்டத்தினை, தமிழகச் சட்டசபையில் அப்போதைய கல்வி அமைச்சர் மாண்புமிகு சி.சுப்பிரமணியன் அவர்கள் முன்மொழிந்து பேசுகையில், நான் பெற்ற பிறவியின் பயனை இச்சட்ட முன்வடிவைக் கொண்டுவருவதன் மூலம் பெற்றுள்ளேன் என்றும் ஒரு பூ மலர்கின்றது அது காயாகி கனியாகி எதிர்காலத் தலைமுறைக்குப் பயன்படும் என்றும் தமது அறிமுக உரையில் கூறியதை நினைவுகூர்ந்தார்.

ஆட்சிமொழிச்சட்டம் இயற்றப்பட்டதன் நோக்கம், மக்களாட்சி நாட்டில், மக்கள் பேசுகிற மொழியில் அரசு நிருவாகம் செயல்பட்டால்தான், அரசின் நலத்திட்டங்கள் மக்களைச் சென்றடையும் என்பதே.

மணிப்பிரவாள நடை இருந்த காலத்தில் பிரேரணை என்றும் சமர்ப்பிக்கிறேன் என்றும் இருந்த நடைமுறைகள் மாறி, இன்று தனித்தமிழ்ச் சொற்களாகச் சட்டமுன்வடிவு என்றும் அளிக்கிறேன் என்றும் மொழிவளர்ச்சிஅடைந்துள்ளது.

தமிழ்மொழியினை வளர்த்தெடுக்கும் பணிகளைத் தமிழ்வளர்ச்சித் துறையும் தமிழ்ப்பல்கலைக்கழகமும் செவ்வனே செய்து வருகின்றன. ஒவ்வொரு மனிதனும் தாய்மொழியினை ஆழ்ந்து கற்பதன் மூலமே, பிறமொழி அறிவினை எளிதில் பெறமுடியும் என்றும் மொழிவளர்ச்சியை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல இத்தகைய பயிற்சி வகுப்புகள் பயன்படும் என்றும் கூறினார். இந்நிகழ்வில் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் கு.சின்னப்பன், உலகத் திருக்குறள் பேரவைச் செயலாளர் திரு.பழ.மாறவர்மன், தஞ்சாவூர் மாவட்டத் தமிழ்வளர்ச்சித்துறை உதவிஇயக்குநர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

தொடர்ந்து, அரசு ஊழியர்களுக்கு அம்மா மென்தமிழ்ச் சொல்லாளர் ஒருங்குறிப் பயிற்சி மற்றும் கணினிவழிக் கோப்புகளைத் தமிழில் கையாளும் விதம் குறித்துக் காட்சியுரை மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் பல்வேறு அரசுத்துறையைச் சார்ந்த 100 - க்கும் மேற்பட்ட பணியாளர்கள், தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வுமாணவர்கள் பங்கேற்றனர்.

# அரிய இசை நாட்டிய நூல்கள் கருத்தரங்கம்

தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறை சார்பாக, 27.02.2020 அன்று அரிய இசை நாட்டிய நூல்கள் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில், துணைவேந்தர் தலைமையேற்றார். இசைத்துறைத் தலைவர், முனைவர் செ. கற்பகம் வரவேற்புரை ஆற்ற, தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர்(பொ.) முனைவர் கு. சின்னப்பன், கலைப்புல முதன்மையர், முனைவர் பா.ஷீலா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மதுரைத் தமிழிசைக் கல்லூரி முதல்வர், முனைவர் எஸ். மல்லிகா, 'அரிய இசை நாட்டிய நூல்கள் காட்டும் பக்தி முறைகள்' என்ற தலைப்பில், மையக் கருத்துரை வழங்கினார். இசைத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் இரா. மாதவி, நன்றி கூறினார்.

# திறன் மேம்பாடு தேசியப் பயிலரங்கம்

தமிழ்ப் பல்கலைக்கழக வேலை வாய்ப்பு வழிகாட்டுதல் மையம் சார்பாக, 12 & 13.03.2020 ஆகிய நாள்களில் 21-ஆம் நூற்றாண்டு மாணவர் களுக்கான சமகாலத் திறன் மேம்பாடு தேசியப் பயிலரங்கம் நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தலைமையேற்ற இவ்விழா வில், மொழிபெயர்ப்புத்துறை முனைவர் பட்ட ஆய்வாளர் த. தமிழ்ப்பிரியா வரவேற்றார். சென்னை, அண்ணா பல்கலைக்கழக ஊடக அறிவியல் துறை இணைப்பேராசிரியர், முனைவர் அருட்செல்வம், புதுக்கோட்டை அரசு கல்வியியல் கல்லூரிப் பேராசிரியர் ரெ. சார்லஸ் வில்லியம், சென்னை, திரைப்படப் பாடலாசிரியர் கவிஞர் இளைய கம்பன், புதுச்சேரி திரைப்படப் பாடகர் முனைவர் சித்தன் தெ. ஜெயமூர்த்தி, சென்னை, ராம்கோ சிஸ்டம் நிறுவன வணிக ஆலோசகர் கோ. வி. சிந்துபைரவி, சென்னை, நீதியரசர் பசீர் அகமது சயீது மகளிர் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் பர்வின் சுல்தானா, சென்னை, இந்து தமிழ்த் திசை நாளிதழ் முதுநிலை உதவியாசிரியர் கவிஞர் மு.முருகேஷ், திருச்சிராப்பள்ளி மாவட்ட முன்னாள் காவல் கண்காணிப்பாளர் அ.கலியமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்கள்

13.03.2020 அன்று நடைபெற்ற நிறைவு விழாவில், துணைவேந்தர் தலைமையுரை ஆற்றினார். முனைவர் பட்ட ஆய்வாளர் த. அறிவழகன் வரவேற்றார். முனைவர் பட்ட ஆய்வாளர் வெ. கிருத்திகாராணி நிகழ்ச்சித் தொகுப்புரையாற்றினார்.



# இணையவழி பொது வாய்மொழித் தேர்வுகள்

## தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கு இணையவழிப் பொது வாய்மொழித் தேர்வுகள்

தமிழ்ப் பல்கலைக்கழக மாண்பமை துணை வேந்தர் தலைமையில் இணையவழியாக 14-07-2020 அன்று நடைபெற்ற ஆய்வுக்குழுக் கூட்டத்தில் கொரோனா தீ நுண்மி நோய்த் தொற்றுப் பரவலாக்கத் தடுப்பைக் கருத்தில் கொண்டும் மாணவர் நலன் கருதியும் தமிழ்ப் பல்கலைக்கழக, முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கான பொது வாய்மொழித் தேர்வை இணையவழி நடத்துவதற்கு முடிவாற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் பதிவாளர்(பொ), புலத் தலைவர்கள், ஆய்வுக்குழுக் கூட்ட உறுப்பினர்கள், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்(பொ), சிறப்பு அழைப்பாளர்கள் பங்கேற்றனர். மொத்தம் 44 இணையவழிப் பொது வாய்மொழித் தேர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

# கொரோனா நச்சுயிர் விழிப்புணர்வு முகாம்

தமிழக அரசின் உயர்கல்வித்துறைச் சுற்றறிக்கைக்கு இணங்க தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கொரோனா நச்சுயிர் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. 10.03.2020 முதல் 12.03.2020 வரை மூன்று நாள்கள் காலை 11.00 மணி முதல் 11.30 வரை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பயின்றுவரும் அனைத்து மாணவ மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கு மருத்துவர் பெ. பாரத ஜோதி, மருத்துவர் மாண்டெலா ஆகியோரைக் கொண்டு விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. இவ்விழிப் புணர்வு முகாமில் 500-க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்களும், ஆசிரியர்களும், பணியாளர்களும் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

# குறுங்காடு வளர்ப்பு

தமிழ்ப் பல்கலைக்கழகமும் தஞ்சாவூர் சுழற் சங்கமும் (ரோட்டரிச் சங்கமும்) இணைந்து தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் 10,000 சதுரஅடியில், மியாவாக்கி முறையில் குறுங்காடு ஒன்றினை அமைக்க, 17.06.2020 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முன்னிலையில் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் கு.சின்னப்பன் ரோட்டரி சங்கத்தின் தலைவர் திரு ப. தமிழ்ச்செல்வன் ஆகியோர், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டனர். 09.07.2020 அன்று நடைப்பெற்ற தொடக்க விழாவில், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர், திரு ம. கோவிந்தராவ், இ. ஆ. ப. அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில், துணைப்பதிவாளர்கள் திரு கோ. பன்னீர்செல்வம் திருமதி இரா.உமாமகேசுவரி கோட்டப்பொறியாளர் திரு பா.செல்வபாண்டியன் மற்றும் உதவிப்பொறியாளர் திரு ம. இளங்கோவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பன்னாட்டு அருங்காட்சியக நாள் சொற்பொழிவு

உலகெங்கும் மே 18 - ஆம் நாள் கொண்டாடப்படும் பன்னாட்டு அருங் காட்சியக நாளை முன்னிட்டு, தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இணைய வழிச் சொற்பொழிவு, ஏற்பாடு செய்யப்பட்டது. பழங்குடி ஆய்வு மையத்தின் மேனாள் இயக்குநர், முனைவர் சி. மகேஸ்வரன் “அறிந்து கொள்வோம் அருங்காட்சியகங்களை” என்ற தலைப்பில் முகநூல் நேரலைவழி உரை ஆற்றினார். அவர் பேசுகையில், அருங்காட்சி யகங்களின் வேர்கள், நமது மரபிலும் நீண்டிருக்கின்றன. மன்னராட்சிக் காலத்தில் சித்திரச் சாலைகள் உருவாக்கப்பட்டன. அதுதான் முதல் அருங்காட்சியக முயற்சி. ஆங்கிலேய வைஸ்ராய்களின் முயற்சியில் வங்காளத்தில் அமைக்கப்பட்ட அருங்காட்சியகமே இந்தியா வின் முதல் அருங்காட்சியகம். அருங்காட்சியகம் என்பது அரும்பொருள் பாதுகாப்பிடம் மட்டு மல்ல. பண்பாட்டுக் கருவூலம். கழிப்பிடங் களுக்கு என்றே அருங்காட்சியகம் ஒன்று இருப்பது வியப்பானது. அருங்காட்சியகங்கள் வட்டார அளவுக்கு விரிவுபெறவேண்டும் என்றார்.



பன்னாட்டு அருங்காட்சியக நாளைக் கொண்டாடுவதற்கான இந்த ஆண்டுக்கான பொருண்மை, ‘சமத்துவத்திற்கான அருங்காட்சி யகங்கள்: பன்முகத் தன்மையும், எல்லோரையும் உட்படுத்துதலும்’ என்பதாகும் என, துணைவேந்தர் கூறினார். ஊரடங்குக் காலத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் செயல்பாடுகள் குறித்துப் பேசிய துணை வேந்தர், ஆசிரியர்களும் மாணவர்களும் பயன் பெறும் வகையில் தமிழ்ப் பல்கலைக்கழக, இணையவழி உரைத் தொடரில் வாரம் மூன்று சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன என்று கூறினார். பாடத்திட்ட மேம்பாடு, சித்த மருத்துவம், புவியின் வடிவம், சுற்றுச்சூழல், மானிடவியல், தொல்லியல் உள்ளிட்ட பல தலைப்புகளில் இணையவழிச் சொற் பொழிவுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பாரதியார் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜெயக்குமார், விஞ்ஞானப் பிரசார் சபையின் அறிவியலாளர் முனைவர் த. வி. வெங்கடேஸ்வரன், பாண்டிச்சேரி பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆ. செல்லப் பெருமாள் மற்றும் கா.இராசன், காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் முத்தையா, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகப் பேராசிரியர் கண்ணன் ஆகியோர் உரையாற்றி உள்ளனர். தொடர்ந்து பலரும் உரையாற்றவுள்ளனர். இவர்களின் சொற்பொழிவுகளைத் தமிழ்ப் பல்கலைக்கழக முகநூல் பக்கத்தில் <https://www.facebook.com/thetamiluniversity/> என்ற முகவரியில் பொதுமக்கள் காணலாம் என்றார்.

தமிழ் வளர் மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
மற்றும்
எட்யுரைட் அறக்கட்டளை, அமெரிக்கா
வழங்கும்

EduRight Foundation
www.eduright.org

வட அமெரிக்கத் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களுக்கான புத்தொளிப்பயிற்சி








# அமெரிக்கத் தமிழாசிரியர்களுக்குப் புத்தொளிப் பயிற்சி

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கீழ், இயங்கிவரும் தமிழ் வளர் மையம், அமெரிக்காவில் இயங்கிவரும் தமிழ்ப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்காக, இணைய வழிப் புத்தொளிப்பயிற்சி ஒன்றைத் தொடங்கி உள்ளது. வட அமெரிக்கத் தமிழ்ப் பள்ளிகளைச் சேர்ந்த, ஏறத்தாழ 208 தமிழாசிரியர்களுக்கு, “மாறி வரும் உலகச்சூழலில் தமிழ்மொழிக் கற்றல்-கற்பித்தலும், புதிய உத்திகளும்” என்னும் தலைப்பில் ஏறத்தாழ இருமாதகாலப் பயிற்சி இதன்வழி வழங்கப்படவுள்ளது.

அயலகத்தில் வாழும் தமிழர்களுக்குத் தமிழைக் கற்பிப்பதற்காக தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தமிழ் வளர் மையமும், அமெரிக்காவின் எட்யுரைட் அறக்கட்டளையும் இணைந்து இந்த நிகழ்வினை ஒருங்கிணைத்துள்ளன. ஜூலை 11 ஆம் நாள், இப்பயிற்சியினைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் தலைமை ஏற்றுத் தொடங்கி வைத்தார். நிகழ்வில் பேசிய துணைவேந்தர், நெருக்கடியான பெருந்தொற்றுக் காலச்சூழலில் உலகம் தவித்துக் கொண்டிருக்கும் வேளையில், தமிழ்க்கல்வியை வேறு கோணத்தில் மேலெடுத்துச் செல்லவேண்டிய நிலையில் இணையவழிக் கல்வியைத் தமிழகத்திலேயே முதன் முதலாக எங்கள் பல்கலைக்கழகம் தொடங்கியது. அதன் நீட்சியாக, அயலகத்திலும் தமிழ்க்கல்வியை விரிவாக்கம் செய்ய விரும்பினோம். அதுவே அமெரிக்கத் தமிழாசிரியர்களுக்கான புத்தொளிப் பயிற்சியாக உருவாக்கம் பெற்றுள்ளது. உலகெங்கும் தமிழ்க் கல்வியை எடுத்துச் செல்லவேண்டும் என்னும் நோக்கில், தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டதன் குறிக்கோள் இதன்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நான் கருதுகின்றேன். பல்லாயிரம் கடல்தொலைவுக்கு அப்பால் வாழும்,

தமிழர்களாகிய உங்களின் பிள்ளைகளுக்கு வாழ்க்கைக்குத் தேவையான மொழியாக, தமிழை மாற்றி அளித்தால்தான் இம்மொழி என்றும் உயிர்ப்புடன் வாழும். மேலும், அயலகத்தில் வாழும் தமிழ்க் குழந்தைகள் எவ்வளவு படித்து முன்னேறி வளமான வாழ்க்கையைப் பெற்றாலும், தாய்மொழி என்னும் அடையாளத்தைத் தக்கவைத்துக் கொள்ளாவிட்டால், அவர்கள் வரலாற்றின் பார்வையில் வறுமையாளர்களாகவே கருதப்படுவர். எனவே, அமெரிக்கத் தமிழ் மாணவர்களிடம் காலத்திற்கேற்ற தமிழ்க்கல்வியைக் கொண்டு செல்வதற்காக, இப்பயிற்சி உங்களுக்கு அளிக்கப் படுகின்றது. இவ்வாய்ப்பினை எதிர்பார்ப்பில்லாத் தன்னார்வத் தமிழாசிரியர்களாக விளங்கும் அமெரிக்கத் தமிழாசிரியர்கள், பயன்படுத்திக் கொண்டு தமிழை அடுத்தநிலைக்கு எடுத்துச்செல்ல வேண்டும் என்றும், அமெரிக்கத் தமிழாசிரியர் களுக்கு வழங்கப்படும் இப்பயிற்சியை மற்ற நாட்டுத் தமிழாசிரியர்களுக்கும் விரிவுபடுத்தி வழங்கவுள்ளோம் என்றும் தன் உரையில் அறிவிப்பினை வெளியிட்டார்.

எட்டு உரைத்தொடர்கள், கலந்துரையாடல், ஆய்வுத்திட்ட ஒப்படைப்பு என்று திட்டமிடப் பட்டுள்ள இப் புத்தொளிப்பயிற்சியின் முதல் வகுப்பினை, பாரதிதாசன் பல்கலைக்கழக மேனாள் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் பா.மதிவாணன் வழங்கினார். முன்னதாக இப்பயிற்சியின் தொடக்க விழா நிகழ்வில் எட்யுரைட் அறக்கட்டளை முதல்வர் வரவேற்புரையாற்றினார். தமிழ் வளர் மைய இயக்குநர் பொறுப்பு வகிக்கும் முனைவர் இரா.குறிஞ்சிவேந்தன், இப்பயிற்சியின் நோக்கம் மற்றும் செயல்திட்டம் குறித்தும், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப்பேரவையின் துணைத்தலைவர் கால்டுவெல் வேள்நம்பி வாழ்த்துரையும் வழங்கினர்.

நிகழ்ச்சியின் நிறைவாக, எட்யுரைட் அறக் கட்டளை நிறுவனர் கீர்த்தி ஜெயராஜ் நன்றியுரை கூறினார். எட்டுவார காலப் பயிற்சிக்கான ஏற்பாட்டை, தமிழ் வளர் மையப் பொறுப்பிலுள்ள முனைவர் சி.தியாகராஜன் மற்றும் முனைவர் இரா. குறிஞ்சிவேந்தன் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

# சிறப்பு மருத்துவ முகாம்

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை எம் ஆர் மருத்துவ மனையுடன் இணைந்து, நீலகிரி ஊராட்சி, திருநகர் வலம்புரி விநாயகர் கோவில் வளாகத்தில், 6.3.2020 சிறப்பு மருத்துவம் முகாம் நடத்தியது . நீலகிரி ஊராட்சித் தலைவர் திருமதி வள்ளியம்மை பாஸ்கரன் தொடங்கிவைத்தார். இம்மருத்துவ முகாமில் 200 - க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

இம்முகாமில், பொதுமருத்துவம், மகப்பேறு மருத்துவம், குழந்தைகள் மருத்துவம், தோல் மருத்துவம், எலும்புமுறிவு மருத்துவம், இதய மருத்துவம், பல்மருத்துவம் மற்றும் சித்த மருத்துவம் சார்ந்த சிறப்பு மருத்துவர்கள் கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனைகள் வழங்கினர். இம்முகாமில் கலந்துகொண்ட அனைவருக்கும்



இலவசமாக மருந்துகள் வழங்கப்பட்டன. நாட்டு நலத்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஞா.பழனிவேலு, உடற்கல்வி ஆசிரியர் திரு செ.பிரபாகரன் மற்றும் நாட்டு நலத்திட்ட மாணவர்கள் ஒருங்கிணைந்து நடத்தினர்.

## முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வழங்கல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க, கொரானா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்காகத் தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் அலுவல் நிலைப் பணியாளர்களின் 2020 ஏப்ரல் திங்களின் ஒருநாள் ஊதியத்தொகை ரூ.5,82,156/- முதலமைச்சரின் பொதுநிவாரண நிதிக்கு வழங்கப்பட்டது.

## புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

தமிழக அரசாணை எண். 222 நிதித்துறை (ஒய்வூதியம்) நாள்: 30.06.2018 - இன் படி ஒய்வூதியம் மற்றும் குடும்ப ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் வழியாக புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் (New Health Insurance Scheme) 01.04.2018 முதல் 30.06.2022 வரை செயல்படுத்த இசைவு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் / பணியாளர்கள் மற்றும் குடும்ப ஒய்வூதியர்களுக்கு விரிவுபடுத்த ஆட்சிக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு, 20.11.2019 அன்று யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்துடன் புரிதல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு நபர் ஒருவருக்கு ஆண்டு சந்தாத் தொகையாக ரூ.4,484/- செலுத்தப்பட வேண்டும். ஒய்வூதியதாரர் / குடும்ப ஒய்வூதியதாரர் ஒருவரின் மாத ஊதியத்திலிருந்து ரூ.350/-வீதம் ஒரு வருடத்திற்குப் பிடித்தம் செய்யப்படும் தொகை ரூ.4,200/- போக நிகரத்தொகை ரூ.284/- பல்கலைக் கழகப் பங்காகச் செலுத்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் சேர, இசைவு தெரிவித்த 153 நபர்களுக்குக் காப்பீட்டுத்தொகையாக ரூ.6,86,052/-ம், தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் உரிய நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், மருத்துவச் சிகிச்சைக்காக உள்நோயாளியாக இருக்கும் நிலையில், சிகிச்சையின் தன்மையினைப் பொறுத்து, மருத்துவ செலவினமாக முறையே ரூ.4,00,000/- முதல் 7,50,000/-வரை அரசாணைக்கு உட்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் / அலுவலர்கள் மற்றும் குடும்ப ஒய்வூதியதாரர்களுக்குப் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கான அடையாள அட்டை துணைவேந்தர் அவர்களால் 14.02.2020 அன்று வழங்கப்பட்டது.

# இணையவழித் தமிழாய்வு உரைத்தொடர்

ஊரடங்குச் சூழலில் பல்கலைக் கழக மானியக் குழுவும் தமிழக அரசின் உயர்கல்வித்துறையும் இணையம் வழியாகச் கல்விச்செயல்பாடுகள் தொடரவேண்டும் என்று அறிவுறுத்தியதைத் தொடர்ந்து, தமிழ்ப் பல்கலைக்கழகம், ஆசிரியர்கள் பயன்பெறும் வகையிலும், மாணவர்கள் தேர்வுகளை எழுதுவதற்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளும் வகையிலும் இணையவழித் தமிழாய்வு உரைத்தொடர் என்ற சொற்பொழிவுத் தொடரை ஏற்பாடு செய்துள்ளது.

இவ்வுரைத் தொடரின் தொடக்க நிகழ்வில் உரையாற்றிய துணைவேந்தர், "இணையவழிக் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை தற்போதைய தகவல் - தொடர்புத் தொழில்நுட்பக் காலத்தில் தவிர்க்க இயலாத கல்விச்செயல்பாடாக மாறி உள்ளது. ஆசிரியர்களும் மாணவர்களும் இணையவழிக்கல்வி எனும் உலகளாவிய, இவ்வணுகுமுறையின் வழி நற்பயன்களைப் பெறும் வகையிலும் கொரோனா நோய்த்தொற்றைத் தடுக்க நடைமுறையிலுள்ள ஊரடங்குக் காலத்தில் கற்றல்-கற்பித்தலைச் தொடர நல்வாய்ப்பாகவும் 'இணையவழித் தமிழாய்வு உரைத்தொடர்' நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது." என்று கூறினார்.

மேலும், "ஐக்கியநாடுகள் குழு உலகம் செம்மையான வளர்ச்சியை எட்ட 17 நிலையான வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goals) வகுத்துள்ளது என்று அவர், தெரிவித்தார். இதில் நான்காவது இலக்கு தரமான கல்வியை அளித்தல் என்பதாகும்.

இதில் பாலின சமத்துவம், அனைவருக்குமான அறிவுப்பரவல், மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வி உள்ளிட்ட பல சிறப்புமிக்க வளர்ச்சி இலக்குகள் குறித்துக் கூறப்பட்டுள்ளன. தற்போது, நாம் நான்காவது கட்ட, 4.0 தொழில் புரட்சி எனப்படும் மின்னணுப் புரட்சியுகத்தில் இருக்கிறோம். இப்புரட்சி செல்பேசி, இணையம் வழியாகச் செயலாக்கம் பெறுகின்றது. இந்தப் புரட்சியின் விளைவாக, எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் பல்லூடகங்களின் வழியாகக் கல்வியைப் பெற இயலும். ஆனால், இரத்தமும் - சதையுமாக உள்ள வகுப்பறைக் கல்விக்கு ஈடுஇணையில்லை. அதே நேரத்தில், இணையவழிக் கல்வி மாணவர் களுக்குக் கற்றல் வாய்ப்பைப் பெருக்கியுள்ளது. ஆசிரியர்களுடைய புலமை இணையம்வழி, உலகெங்கும் சென்றடையும். எனவே உலகளாவிய ஆசிரியர்களை உருவாக்க இணையவழிக் கல்வி வாய்ப்பளிக்கின்றது" என்று துணைவேந்தர் தொடக்கவுரையில் சுட்டிக் காட்டினார்.

"முதல்நிலையில் முகநூலின் தமிழ்ப் பல்கலைக் கழக இணையவழித் தமிழாய்வு உரைத் தொடர் என்ற குழுவின் வழி நேரலை வசதியைப் பயன்படுத்தி தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் என இவ்வுரைத் தொடர் அமையும். பின்னர் இவ்வுரைகளின் காணொளிக்காட்சிகள் உலகெங்குமுள்ள தமிழ் ஆய்வாளர்களும் மாணவர்களும் பயன்பெறும் வகையில் தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்தில் (<https://www.tamiluniversity.ac.in/>) வெளியிடப்படும். தமிழ்ப் பல்கலைக்கழகத் தேவைக்கான பயிற்சித் தளமொன்றை உருவாக்கிக் கொள்வதற்கான தொடக்க முயற்சியாகும் இது, முறையான இணையவழிக் கற்றலை வளப்படுத்த தமிழ்ப் பல்கலைக்கழகம் புதிய மென்பொருள் வசதிகளை ஏற்படுத்தும்" என்றார்.

இவ்வுரைத்தொடரின் முதல் நிகழ்வாக, 22 ஏப்ரல் 2020 அன்று, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் மேனாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் பா. மதிவாணன் 'ஆராய்ச்சி நெறிமுறைகள்' என்ற தலைப்பில் நேரலையில் உரைநிகழ்த்தினார்.

தொடர்ந்து, நாட்டுப்புறவியல் துறையின் மேனாள் பேராசிரியர் ஆறு.இராமநாதன், காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒ. முத்தையா, பாரதியார் பல்கலைக்கழக மொழியியல் துறை, மேனாள் பேராசிரியர் சி.சண்முகம் ஆகியோர், உரையாற்ற உள்ளனர். இவ்வரிசையில் மேலும் பல அறிஞர்கள் உரையாற்றுவர். ஆசிரியர்களும் ஆய்வாளர்களும் உரைத்தொடர் நிகழ்வில் பங்கு பெறுவது மிக இன்றியமையாதது என்றார்.




# தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்களின் 11 - ஆவது நினைவுநாள் (29.06.2020) நிகழ்வு

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணை வேந்தர் முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம் அவர்களின் **11-**ஆவது நினைவுநாள் மரியாதை செலுத்தும் நிகழ்வில் தமிழ்ப் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடத்தில் வைக்கப்பட்ட, அன்னாரின் திருவுருவப் படத்திற்கும் அவர் துணைவேந்தராக இருந்தபொழுது, தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் வளர்க்கப்பட்ட மரங்களுக்கு இடையில் அமைக்கப் பட்டுள்ள நினைவுத் தோட்டத்தில் அன்னாரின் நினைவுக் கல்வெட்டிற்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழகப் பதிவாளர்(பொ) முனைவர் கு.சின்னப்பன், நிதியலுவலர் இரா. குணசேகரன், துணைப் பதிவாளர்கள் கோ. பன்னீர்செல்வம், முனைவர் இரா. உமாமகேஸ்வரி மற்றும் உதவிப்பதிவாளர்கள் கலந்துகொண்டு மரியாதை செலுத்தினார்கள்.





பேரா. ந. அதியமான்

# பேரா. ந. அதியமான் அறக்கட்டளை உருவாக்கம்

தமிழ்ப் பல்கலைக்கழக கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி இயற்கை எய்திய பேராசிரியர் ந. அதியமான் அவர்களின் பெயரில், தமிழ்ப் பல்கலைக்கழகக் கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறையில் படிக்கும் மாணவர்களில் முதல் மதிப்பெண் பெறும் மாணவர் ஒருவருக்கு, ஆண்டுதோறும் ஊக்கத்தொகை அளிக்கும் வகையில், அதியமான் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் அவரது நண்பர்கள் இணைந்து அறக்கட்டளை ஒன்றை நிறுவி உள்ளனர். இதற்கான கூட்டம் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சுவடிப்புலக் கருத்தரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமையுரை ஆற்றிய துணை வேந்தர், பல்கலைக்கழக வளர்ச்சிக்கும் மாணவர்களின் கல்வி உயர்வுக்கும் அரும்பாடு பட்டவர் பேராசிரியர் அதியமான் என்றும் அவரது நினைவாக இவ்வறக்கட்டளை நிறுவி இருப்பது வரவேற்கத் தக்கது என்றும் குறிப்பிட்டார். இவ்வறக் கட்டளையின் அமைப்பாளர், பேராசிரியர் சு. ராசவேலு வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர்கள் இராம சுந்தரம், கி. அரங்கன், இரா. முரளிதரன், க.குளத்தூரான், மற்றும் பேராசிரியர்கள் திரு ரெ. நீலகண்டன், திருமதி ஷீலா ஆகியோர் பேராசிரியர் அதியமான் அவர்களின் நற்பண்புகளையும் அவர் தமிழ்ப் பல்கலைக்கழக வளர்ச்சிக்குப் பங்கு வகித்தமையையும் நினைவு கூர்ந்தனர். பேராசிரியர் ராஜவேலு மற்றும் பேராசிரியர் ராஜன் ஆகியோர் துணை வேந்தரிடம் அறக்கட்டளைக்கான தொகை ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரத்திற்கான வரைவோலையைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கினர். மேலும், பேராசிரியர் அதியமான் பொருளாளராக இருந்து செயல்படுத்திய தொல்லியல் கழகத்திற்கு, அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்த, தனியாக ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரத்திற்கான வரைவோலையைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வழங்க அதனைத் தொல்லியல் கழகத்தின் செயலர் ராஜவேலு பெற்றுக் கொண்டார். இறுதியாக, அதியமான் குடும்பத்தின் சார்பாக, அவரது தந்தையார் நடராஜன் அதியமான் கல்வித்திறத்தைக் குறித்துப் பேசினார். கூட்டத்தில் பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொண்டனர். நிறைவாக, புதுவை மத்தியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் க. ராஜன் நன்றி கூறினார்.




# தமிழ்த் தாத்தா உ.வே.சா. பிறந்தநாள் விழா

தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்களின் 166 ஆவது பிறந்தநாள்விழா 19.02.2020 அன்று, அவர் பிறந்த ஊரான திருவாரூர் மாவட்டம், உத்தமதானபுரத்தில் கொண்டாடப்பட்டது. இப்பிறந்தநாள் விழாவில், தமிழ்த் தாத்தா அவர்களின் திருவுருவச் சிலைக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், மாலை அணிவித்து மரியாதை செய்தார். இவ்விழாவில் பதிவாளர் (பொ) முனைவர் கு. சின்னப்பன், ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் பா. ஜெயக்குமார், ஓலைச்சுவடித்துறைத் தலைவர் முனைவர் கோவைமணி, துணைப்பதிவாளர் கோ. பன்னீர் செல்வம், நிதி அலுவலர் முனைவர் இரா. உமா மகேசுவரி, உதவிப்பேராசிரியர் முனைவர் கலாஷீதர், ஓய்வுபெற்ற மாவட்டக் கருவூல அலுவலர் அன்பழகன், மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## 2020 - 2021 - ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவர்கள் சேர்க்கை

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஒருங்கிணைந்த முதுகலைத் தமிழ்ப் பாடப் பிரிவுகளுக்கு 2020 - 2021 ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைக்குக் கலந்தாய்வு நடைபெற்றது. கலந்தாய்வில் தேர்வு பெற்ற மாணவர்களுக்குச் சேர்க்கைக்கான ஆணையைத் துணைவேந்தர் வழங்கினார். இந்நிகழ்வில் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ.) முனைவர் கு. சின்னப்பன், ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் பா. ஜெயக்குமார், இலக்கியத்துறைத் தலைவர் முனைவர் பெ. இளையாப்பிள்ளை, பேராசிரியர் முனைவர் ஜெ. தேவி, துணைப் பதிவாளர் கோ. பன்னீர்செல்வம், உதவிப்பேராசிரியர் தனலெட்சுமி, சேர்க்கைப்பிரிவு அலுவலர் செந்தமிழ்ச்செல்வி ஆகியோர், கலந்துகொண்டனர்.

# “நாட்டுப்புறக் கலைஇலக்கிய மன்றம் அல்லது தமிழ்மரபு மன்றம் எனும் வகையில் அமைப்புகளை உருவாக்கவேண்டும்”

## உலக நாட்டுப்புறவியல் நாள் விழாவில் துணைவேந்தர் பேச்சு

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நாட்டுப்புறவியல் துறை சார்பில் 22.08.2020 அன்று காலை, உலக நாட்டுப்புறவியல் நாளை முன்னிட்டு இணையவழி உரையரங்க நிகழ்வு நடைபெற்றது. துணைவேந்தர் தம் தலைமையுரையில், “தமிழ்ப் பல்கலைக் கழகம் நாட்டுப்புற ஆய்வில் முனைப்பாக ஈடுபட்டு வந்துள்ளது; நாட்டுப்புற ஆய்வுகள் இலக்கியம், வரலாறு போன்ற பிறதுறை ஆய்வுகளுக்கும் மிகவும் தேவையாகின்றன. நாட்டுப்புற இலக்கியங்களும், நாட்டுப்புறக் கலைகளும் மதித்துப் போற்றப்பட வேண்டும். தமிழ்ச்சூழலில் திரைப்படங்களில் நாட்டுப்புறக் கலையும், கலைஞர்களும் தேவை கருதிப் பயன்படுத்தப்படுகின்றனர். நாட்டுப்புற மக்களின் வழக்காறுகள் மக்கள் மத்தியில் பரவலான புழக்கத்தில் இருக்க வழிவகைகளை உருவாக்க வேண்டும். இதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஊர்தோறும் நாட்டுப்புறக்கலை, இலக்கிய மன்றம் அல்லது தமிழ் மரபு மன்றம் எனும் வகையில் அமைப்புகளை உருவாக்க வேண்டும்” என்று குறிப்பிட்டார்.

நாட்டுப்புறவியல் அறிஞர் ஆறு. இராமநாதன் ‘நாட்டுப்புறவியல் - செய்ததும் செய்ய வேண்டியதும்’ என்ற தலைப்பில் சிறப்புரை வழங்கினார். அவர்தம் உரையில் “நாட்டுப்புறவியல் தமிழில், கடந்தகாலத்தில் மிக நன்றாக உருவாகி வளர்ந்துள்ளது. நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், வழக்காறுகள் குறித்து ஏராளமான ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. பல அறிஞர்கள் இத்துறையில் பங்களிப்பு செய்துள்ளனர்.

சிலர் நினைப்பதுபோல், ஆடல், பாடல் செய்யும் துறை அல்ல இது. செவ்விலக்கியங்களுக்கு இணையாக நாட்டுப்புற இலக்கியங்கள் உள்ளன. தமிழறிஞர்கள் நாட்டுப் புறவியலைப் பார்க்கும் பார்வை மாற வேண்டும். அரசும், பிறநிறுவனங்களும் நாட்டுப் புறவியலுக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும்” என்றார். நிகழ்வில் தமிழி கலைக்களம் சார்பில், நாட்டுப்புற இசைநிகழ்ச்சி நடைபெற்றது. ஆரல் விக்டர் நாட்டுப்புறப் பாடலை வழங்கினார். நாட்டுப் புறவியல் துறைத்தலைவர் முனைவர் இரா.காமராசு வரவேற்க, உதவிப்பேராசிரியர் முனைவர் நா. மாலதி நன்றி கூற, உதவிப் பேராசிரியர் முனைவர் சீமான்இளையராஜா ஒருங்கிணைத்தார். நிகழ்வில் நாட்டுப்புற ஆய்வாளர்கள், கலைஞர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.






தமிழ்ப் பல்கலைக்கழகச் செஞ்சுருள் சங்க ஆண்டு விழா, 11.03.2020 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் துணைவேந்தர் தலைமையேற்றார். மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் செஞ்சுருள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர், மருத்துவர் பசுபதீஸ்வரர் சிறப்புரை வழங்கினார். அவரைத் தொடர்ந்து செஞ்சுருள் சங்கத்தின் திட்ட அலகு ஒருங்கிணைப் பாளர், மாணவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கினர். மாவட்ட ஆலோசகர், திரு.வேதிபிரபு, திருமதி ஜனிபர் ஆகியோர், எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு மற்றும் தற்காப்பு வழிமுறைகளை எடுத்துரைத்தனர். தமிழ்ப் பல்கலைக்கழகச் செஞ்சுருள் சங்க ஒருங்கிணைப்பாளர், முனைவர் கோ. ப. நல்லசிவம் தொகுத்து வழங்கினார்.

## மகளிர் சுய உதவிக்குழு வழி சிற்றுண்டி விடுதி

தமிழ்ப் பல்கலைக்கழக ஆடவர் மற்றும் மகளிர் விடுதிக்கு மூன்று வேளை உணவு வழங்கவும் பல்கலைக் கழக ஆசிரியர்கள் பணியாளர்களுக்கு நண்பகல் உணவு, தேநீர் வழங்கவும் சிற்றுண்டி விடுதி பல்கலைக்கழக ஊழியர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வந்தது.

இதனால் பல்கலைக் கழகத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ 36 இலட்சம் இழப்பு ஏற்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு செலவினங்களைக் குறைக்கும் வகையில், தமிழ்ப் பல்கலைக்கழகச் சிற்றுண்டி விடுதியை நடத்து வதற்கு, தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஏதேனும் ஒரு மகளிர் சுய உதவிக்குழுவைப் பரிந்துரைக்குமாறு தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) அலுவலகத்துக்கு எழுதிக் கேட்கப்பட்டது. அவர்கள் ஏற்கெனவே மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சிற்றுண்டிவிடுதி நடத்திவரும் தஞ்சை வண்ணாரப்பேட்டை ஊராட்சி மகளிர் சுயஉதவிக் குழுவைப் பரிந்துரை செய்து அனுப்பினர். எனவே 10-06-2020 முதல் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் தஞ்சை வண்ணாரப் பேட்டை ஊராட்சி, மகளிர் சுய உதவிக்குழு ஓராண்டுக்குச் சிற்றுண்டி விடுதி நடத்த அனுமதிக்கப் பட்டது.

பல்கலைக்கழகச் சிற்றுண்டி விடுதி மகளிர் சுய உதவிக்குழுவால், சேவையின் முகத்தான் நடத்தப் படுவதால், மாநில அரசு, மகளிர் சுய உதவிக்குழுவை ஊக்குவிக்கும் வகையில், திங்கள் ஒன்றுக்கு ரூ. 300/- (ரூபாய் முந்நூறு மட்டும்) பராமரிப்புச் செலவுத் தொகையாக மேற்படி மகளிர் சுய உதவிக் குழுவிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

பல்கலைக்கழகச் சிற்றுண்டி விடுதியை 10.06.2020 அன்று துணைவேந்தர் தொடங்கிவைத்தார். நிகழ்வில் பதிவாளர் (பொ) முனைவர் கு. சின்னப்பன், நிதியலு வலர் இரா. குணசேகரன், துணைப்பதிவாளர்கள் திரு கோ. பன்னீர்செல்வம், முனைவர் இரா. உமாமகேஸ்வரி, மற்றும் கல்விநிலை மற்றும் அலுவல்நிலைப் பணியாளர் கள் கலந்துகொண்டனர்.

# தமிழ்ப் பல்கலைக்கழக நூல்கள் சிறப்புத் தள்ளுபடி விற்பனையில் புதிய சாதனை

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நிறுவன நாள் மற்றும் அண்ணா பிறந்தநாளையொட்டி ஆண்டு தோறும், செப்டம்பர் 15 - ஆம் நாள் தொடங்கி, 30 நாட்களுக்கு 50 விழுக்காடு கழிவு விலையில் தமிழ்ப் பல்கலைக்கழக நூல்கள் விற்பனை செய்யப் பட்டு வருகின்றன. தமிழ்ப் பல்கலைக்கழக நிறுவன நாள் சிறப்புத் தள்ளுபடி விற்பனையினை, அரண் மனை வளாகத்திலிருந்து மாற்றி, முதன் முதலாக அலுவலகக் கட்டட முதல்தளத்தில் 15.9.2020 அன்று, துணைவேந்தர் தொடங்கி வைத்தார்.

புதிய முயற்சியாக, நூல் விலைப்பட்டியலுடன் அஞ்சலில் பெறுவதற்கான வசதி விவரங்களைக் கட்செவி (Whatsapp), முகநூல் வழியாகச் செய்திகள் வெளியிடப்பட்டு, தமிழ் ஆர்வலர்களால் நாடெங்கிலும் தகவல்கள் பகிரப்பட்டதால், பல்வேறு மாநிலங்கள், மாவட்டங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பணப் பரிமாற்றத்தின் வழி நூல்கள் பெருமளவில் விற்பனையாகியுள்ளன. மேலும் பொதுமக்களின் வேண்டுகோளை ஏற்று 31.10.2020 வரை விற்பனை நீட்டிக்கப்பட்டது.

நேரிலும் அஞ்சலிலும் பல்வேறு நூல்கள் விற்றுத் தீர்ந்தன. பொதுவாக, தள்ளுபடிக் காலங்களின் விற்பனைச் சராசரி 3 இலட்சமாக இருந்த நிலையில், இந்த ஆண்டுச் சாதனையாக 17.50 இலட்சம் அளவிற்கு விற்பனை நடந்துள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை இயக்குநர் (பொ)பேராசிரியர் தியாகராசன் உள்ளிட்ட பதிப்புத்துறை பணியாளர்களைப் பதிவாளர் (பொ) பேராசிரியர் கு. சின்னப்பன் அவர்கள் முன்னிலையில், துணைவேந்தர் பாராட்டியதோடு, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகளைப் பல்லாயிரம் பேர் அறிந்து கொள்ள உதவிய செய்தி - ஊடகங்களுக்கும் தமிழ் மொழியின்பால் அக்கறை செலுத்திய சமூக வலைத்தள நண்பர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்தார்.



# இலஞ்ச ஒழிப்பு உறுதிமொழி



மத்திய அரசின் மத்திய இலஞ்ச ஒழிப்புத்துறை சார்பாக, 27.10.2020 முதல் 02.11.2020 வரை இலஞ்ச ஒழிப்பு வாரமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. அதன்படி, தமிழக அரசின் செய்தித்துறை இணைச் செயலாளர் அனுப்பிய கடிதத்தில் 27.10.2020 அன்று காலை 11.00 மணிக்குத் தமிழக அரசு அலுவலர்கள் அனைவரும் இலஞ்சஒழிப்பு உறுதிமொழி எடுக்கும் படி தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனைச் செயல்படுத்தும் விதமாகத் துணை வேந்தர் தலைமையில், இலஞ்ச ஒழிப்பு உறுதி மொழி எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில், தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ) முனைவர் கு. சின்னப்பன், நிதிஅலுவலர், ஆசிரியர்கள், பணியாளர்கள் பங்கேற்றனர்.

# இணையவழி உலக யோகா நாள் நிகழ்வு

தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் 21-06-2020 அன்று இணையவழி உலக யோகா நாள் கொண்டாடப்பட்டது. யோகப்பயிற்சியும் அளிக்கப்பட்டது. தமிழ்ப்பல்கலைக்கழக யோகா பயிற்றுநர் முனைவர் கெ. சு. தங்கபாண்டியன் செயல்விளக்க உரை நிகழ்த்தினார்.



## சிறப்புச் சொற்பொழிவு

உலக யோகா நாள் சிறப்புச் சொற்பொழிவு (22.06.2020) நிகழ்வில் ‘இன்றைய சூழலில் யோகாவின் தேவையும், பயனும்’ என்ற பொருண்மையில், அண்ணாமலைப் பல்கலைக்கழக யோகா ஆய்வுமைய இயக்குநர், முனைவர் கி.வெங்கடாசலபதி சிறப்புரையாற்றினார்.



# ‘தமிழில் உலக இலக்கியங்கள்’ இணையவழிக் கருத்தரங்கம்

தமிழ்ப்பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத்துறை ‘தமிழில் உலக இலக்கியங்கள்’ என்ற தலைப்பிலான இணையவழி மூன்றுநாள் கருத்தரங்கை நடத்தியது. அமெரிக்கா, இலங்கை, சீனா, மலேசியா ஆகிய நாடுகளில் இருந்தும் மஹாராஷ்டிரா, காசி, கேரளா, புதுச்சேரி போன்ற பல்வேறு பகுதிகளிலிருந்து பேராளர்கள் கலந்துகொண்ட இக்கருத்தரங்கைத் துணைவேந்தர் தொடங்கிவைத்தார். மொழி பெயர்ப்புத் துறைத்தலைவர், முனைவர் சௌ. வீரலெக்ஷ்மி கருத்தரங்கினை ஒருங்கிணைத்தார். துறைப்பேராசிரியர்கள் முனைவர் ப. இராஜேஷ், முனைவர் இரா.சு.முருகன், முனைவர் சா. விஜய இராஜேஸ்வரி ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடுகளைச் செய்தனர்.

முதல் நாள், (25.07.2020) திரு ஸ்ரீதரன் IFS, புதுதில்லி,‘பிஞ்சு விரல்களின் ஊடே சிந்தும் நதிநீர் : சீனத்திலிருந்து தமிழுக்கு மொழியாக்கம் செய்தலின் சிக்கல்கள்’ என்ற தலைப்பில், சீனமொழியில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்பு செய்வதின் சிக்கல்களை மிகச்சிறப்பாக எடுத்துரைத்தார்.

இரண்டாம் நாள்,(26.07.20) கார்த்திகைப் பாண்டியன், ‘உலக இலக்கியங்கள் ஆங்கிலம் வழி தமிழில்’ என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். இலக்கிய வாசகன் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட கார்த்திகைப்பாண்டியன், எஸ். ராம கிருஷ்ணன் அவர்களைத் தன்னுடைய ஆதர்சம் என்று குறிப்பிட்டார். நேசமித்திரனுடன் வலசை இதழை நடத்தி, அதன்வழி பல மொழிபெயர்ப்பாளர்கள் உருவாக்கியமையை, வலசையில் உடல் மீதான வன்முறை மூன்றாம்பாலினம், குழந்தைகளின் அக உலகம், நாடுகடத்துதல்-தன்னைத்தானே இச்சூழலில் கடத்துதல் உட்பட பல பொருண்மைகளைக் கொண்டு உருவாக்கியமையை, அதன்வழி கிடைத்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். மனத்திற்கு அணுக்கமான படைப்புக்களை மட்டுமே மொழி பெயர்ப்பதாக, கார்த்திகைப்பாண்டியன் கூறினார்.

தொடர்ந்து, 27.07.2020 அன்று, ‘தமிழில் அரபு இலக்கியங்கள்’ என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழக அரபுமொழித்துறைப் பேராசிரியர் ஜாகிர்ஹூசைன் அவர்கள் உரையாற்றினார். செம்மொழிகளுள் ஒன்றான அரபுமொழி ஒரு இசைமொழி. கவிதை மரபில் வலுவான மொழி, இசை, ஓவியம், திரைப்படம், கவிதை, சிறுகதை, புதினம் என அனைத்து வகைகளும் அரபுமொழியில் உள்ளன என்றார்.

# உலக மகளிர் தின விழா

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 09.03.2020 அன்று, உலக மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில், தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் முனைவர் கோ. பாலசுப்ரமணியன் அவர்களும் பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ப. மணிசங்கர் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். புலத்தலைவர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், சிறப்பு விருந்தினர்கள், அலுவல்நிலைப் பணியாளர்கள், மாணவ மாணவியர் திரளாகக் கலந்துகொண்டனர். ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. நிறைவாகக் கலைநிகழ்ச்சிகளும் நிகழ்த்தப் பெற்றன.













# “மொழி பெயர்ப்புச் சிக்கல்கள்” (The Problems of Translation) இணையவழித் தேசியக் கருத்தரங்கம்

மொழிபெயர்ப்புத்துறை நடத்திய “மொழி பெயர்ப்புச் சிக்கல்கள்” (The Problems of Translation) என்னும் பொருண்மையில் மூன்று நாள்கள் (12.06.2020 முதல் 14.06.2020 வரை) இணையவழி தேசியக் கருத்தரங்கம் (National Webinar) சிறப்பாக நடைபெற்றது. மொழிபெயர்ப்புத்துறை தலைவர் முனைவர் ப. இராஜேஷ் வரவேற்றுப் பேசினார். தனது தலைமையுரை மற்றும் தொடக்க உரையில் துணைவேந்தர், தமிழ் மொழியிலிருந்து பிற மொழிக்கு மொழி பெயர்க்கும்போது ஏற்படும் பல்வேறு சிக்கல்களை மொழி பெயர்ப்பாளர் என்ற நிலையிலிருந்து எடுத்துக்கூறினார். மேலும் உலக இலக்கியங்களைத் தமிழ் மொழிக்கு மொழி பெயர்ப்பதும், தமிழ் இலக்கியங்களை உலக நாடுகளுக்கு எடுத்துச் செல்வதும் காலத்தின் தேவை. அப்போதுதான், நமது நாட்டின் சிறப்புகளை பிற நாட்டினர் அறிந்துகொள்ள முடியும் என்றார்.

முதல்நாள் நிகழ்வில் (12.06.2020) அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையப் பேராசிரியர், முனைவர் ப.மணிமாறன் “மொழியியல் நோக்கில் மொழிபெயர்ப்பு” (Linguistic Perspective on Translation) என்னும் பொருண்மையில் பேசும்பொழுது, தனி உருபன், கட்டுஉருபன், உருபனியல், தொடர், வாக்கியம் போன்றவைகளை மொழியியல் நோக்கில் எவ்வாறு மொழிபெயர்ப்பினூடாக ஆளலாம் என, விளக்கியுரைத்தார். முன்னதாக மொழிபெயர்ப்புத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் சா. விஜயராஜேஸ்வரி கருத்தாளர் பற்றிய அறிமுக உரையாற்றினார்.

இரண்டாம் நாள் (13.06.2020) மதுரைக் காமராஜர் பல்கலைக்கழக மொழியியல் துறையின் தலைவர் பேராசிரியர் ஆ. முனியன் “மொழி பெயர்ப்புச் சிக்கல்கள்” (The Problems of Translation) என்னும் பொருண்மையில் மொழிவழிச் சிக்கல்கள், பண்பாட்டுச் சிக்கல்கள், இனவழிச் சிக்கல்கள், பேச்சு வழக்கில் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் மரபுவழிச் சிக்கல்கள் போன்றவற்றைப் பற்றி விரித்துரைத்தார்.

மூன்றாம் நாள் நிகழ்வில், (14.06.2020) அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையப் உதவிப் பேராசிரியர் முனைவர் அ.காமாட்சி “இலக்கணமும் மொழி பெயர்ப்பும்” (Translation and Grammar) என்னும் பொருண்மையில், மொழிபெயர்க்கும்போது இலக்கணத்தை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் மற்றும் பிற மொழியிலிருந்து தமிழ் மொழிக்கும், தமிழ் மொழியிலிருந்து பிற மொழிக்கும் மொழி பெயர்க்கையில் இலக்கணப் பிழைகளை எவ்வாறு களைவது என்பது குறித்த கருத்துகளை முன் வைத்துப் பேசினார். முன்னதாக, மொழி பெயர்ப்புத் துறை இணைப்பேராசிரியர் முனைவர் செள. வீரலக்ஷ்மி, கருத்தாளர் பற்றிய அறிமுக உரை ஆற்றினார். இக்கருத்தரங்கில் பங்கேற்க 1280 பேர் பதிவுசெய்திருந்த நிலையில் தொடர்ந்து மூன்று நாட்களும் பங்கேற்ற 470 பேருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த இணையவழி தேசியக் கருத்தரங்கில் புலத்தலைவர் மற்றும் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ.)பேராசிரியர் முனைவர் கு.சின்னப்பன், நிறைவுரை ஆற்றினார். முடிவில் மொழிபெயர்ப்புத் துறை உதவிப் பேராசிரியர் மற்றும் இணையவழி தேசியக் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர், முனைவர் இரா. சு. முருகன், நன்றியுரை கூறினார்.

# "படைப்பாளிகளின் பண்பாட்டுப் பதிவுகள்" இணையவழிப் பயிலரங்கம்












இலக்கியத்துறையின் சார்பாக "படைப்பாளிகளின் பண்பாட்டுப் பதிவுகள்" என்னும் தலைப்பில் இணையவழிப் பயிலரங்கம் 10.08.2020 முதல் 19.08.2020 வரை சிறப்பாக நடந்தேறியது. இப்பயிலரங்கில் தமிழ்ப்படைப்புலகின் தலைசிறந்த பத்து எழுத்தாளர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள். அவ்வகையில் 10.08.2020 அன்று, கலைமாமணி பேராசிரியர் கு. ஞானசம்பந்தம் தொ. பரமசிவனின் "பண்பாட்டு அசைவுகள் என்னும் தலைப்பிலும்" 11.08.2020 அன்று சிறுகதை எழுத்தாளர், பதிப்பாசிரியர், மொழிபெயர்ப்பாளர், நடிகர், கதை சொல்லி என பன்முகத்தன்மை கொண்ட பவா. செல்லத்துரை "வாழ்விலிருந்து கதைகள்" என்னும் தலைப்பிலும் 12.08.2020 அன்று இந்தியாவின் புகழ்பெற்ற நாவலாசிரியர்களில் ஒருவரான, எழுத்தாளர் இமயம் "நான் எழுதிய பெண்கள்" என்னும் தலைப்பிலும் கருத்துரைகளை வழங்கினர்.

13.08.2020 அன்று தமிழகத்தைச் சார்ந்த புதின, சிறுகதை எழுத்தாளரும், சாகித்ய அகாதெமி விருது பெற்றவருமான எழுத்தாளர் சோ.தர்மன் "தொன்மங்களிலிருந்து கதைகள்" என்னும் தலைப்பிலும், 14.08.2020 அன்று நவீன தலித் இலக்கியத்தின் முக்கிய ஆளுமையாக கருதப்படும் கவிஞர் யாழன் ஆதி "கவிதை வாழ்வு" என்னும் தலைப்பிலும் பொழிவு ஆற்றினர். 15.08.2020 மொழிபெயர்ப்பாளரும், சாகித்ய அகாதெமி விருதாளருமான எழுத்தாளர் கே.வி.ஜெயஸ்ரீ "மொழிபெயர்ப்பில் அயல் பண்பாடு" என்னும் தலைப்பிலும் 16.08.2020 அன்று கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, என பழந்தமிழியல் பதிப்பியல் எனப் பன்முக ஆளுமையாக விளங்கும் எழுத்தாளர் பேராசிரியர் பெருமாள்முருகன் "கொங்கு வட்டாரப் படைப்புகளும் வேளாண் பண்பாடுகளும்" என்னும் தலைப்பிலும் கருத்துரை வழங்கினர்.

17.08.2020 அன்று "வாழ்வியல் பண்பாடு" என்னும் தலைப்பில் எழுத்தாளர் போப்பு உரையாற்ற தொடர்ந்து, 18.08.2020 அன்று "செம்புல மாந்தரின் பண்பாட்டுக் கூறுகள்" என்னும் தலைப்பில் தமிழ் இலக்கிய உலகின் முக்கியமான படைப்பாளி, நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை என பலதளங்களில் இயங்குகின்ற எழுத்தாளர், அழகிய பெரியவன் கருத்துரை வழங்கினார்.

19.08.2020 அன்று நாடாளுமன்ற உறுப்பினர், மொழிபெயர்ப்பாளர், அரசியல் விமர்சகர், எழுத்தாளர் துரை.ரவிக்குமார் "தொடுதிரை யுகத்தில் தமிழ் இலக்கியம்" என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கினார்.

இப்பயிலரங்கமானது பேராசிரியர்கள் ஆய்வாளர்கள் மாணவர்கள் தமிழ் ஆர்வலர்கள் என அனைவருக்கும் பயனுள்ள வகையில் அமைந்தது எனலாம். இப்பயிலரங்கத்தின் வழி, இந்தியச் சமூகமானது சாதி, சமயரீதியான பிற்போக்குவாதம், பெண்ணடிமை, பொருளாதார ஏற்றத்தாழ்வு போன்றவற்றால் கட்டுப்படுத்தப்பட்டு சமூக நல்லுறவு என்ற அடித்தளத்தினை விட்டு விலகிச் செல்வதனைப் படைப்புகளின் வழி கவனப்படுத்தியதோடு, இந்நிலை மாறுவதற்குச் சமூகத்தில் உள்ள பல்வேறுபட்ட மக்களும் இன, மத, தேசிய வேறுபாடுகளைக் கடந்து சகோதரத்துவம், புரிந்துணர்வு, விட்டுக் கொடுத்தல் மற்றும் சகிப்புத்தன்மை என்பனவற்றை அடித்தளமாகக் கொண்டு வாழும் இணக்கப்பாட்டினை முன்வைப்பதாக அமைந்தது.

ஆய்வாளர்களுக்குப் புதிய சிந்தனையைத் தூண்டுவதாகவும், எதிர்காலஆய்வுக்களங்கள் குறித்துத் திட்டமிடவும் வழிகோலியது. இதில் தமிழகம் மட்டுமல்லாமல், இந்தியாவின் பிற மாநிலங்கள், அயல்நாடுகள் போன்றவற்றில் இருந்தும் ஆய்வாளர்கள் 960 - க்கும் மேற்பட்டவர்கள் பதிவு செய்திருந்த நிலையில், 600 - க்கும் மேற்பட்டோர் இப்பயிலரங்கில் கலந்து கொண்டனர். கருத்துரையில் இருந்து எடுக்கப்பட்ட வினாக்கள் மூலம் பின்னூட்டம் பெறப்பட்டது. பயிலரங்கின் இறுதியில், வருகைப்பதிவு மற்றும் மதிப்பெண் அடிப்படையில் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பயிலரங்கை, இலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர், பெ. இளையாப்பிள்ளை மற்றும் துறையினர் ஒருங்கிணைத்தனர்.

# பன்னாட்டு மொழிபெயர்ப்பு நாள் இணையவழிக் கருத்தரங்கம்



மொழிபெயர்ப்புத்துறை நடத்திய பன்னாட்டு மொழிபெயர்ப்பு நாள் இணையவழிக் கருத்தரங்கம் (Webinar)நடைபெற்றது. மொழிபெயர்ப்புத் துறைத்தலைவர், முனைவர் சௌ. வீரலஷ்மி வரவேற்புரையாற்றினார். துணைவேந்தர் தலைமையுரையாற்ற, பதிவாளர் வாழ்த்துரைத்தார்.

மதுரை அமெரிக்கன் கல்லூரி மேனாள் பேராசிரியரும் எழுத்தாளரும் மொழி பெயர்ப்பாளருமான ஞா.சாம் ஜார்ஜ், ‘மொழிபெயர்ப்பு நுட்பங்கள்’ என்னும் பொருண்மையில், சிறப்புப் பொழிவாற்றினார். மொழிபெயர்ப்புத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் சா.விஜயராஜேஸ்வரி நிகழ்வைத் தொகுத்துரைக்க, உதவிப் பேராசிரியர் முனைவர் இரா.சு.முருகன் நன்றியுரை கூறினார்.

# சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை இணையவழிக் கருத்தரங்கம்

சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறையின் சார்பில், ஒருநாள் இணையவழிக் கருத்தரங்கம் ஜூன் 05, 2020 அன்று, சுற்றுச்சூழல் தினத்தைக் கொண்டாடும் விதமாக, ‘பல்லுயிர்ப் பெருக்கப் பாதுகாப்பு’ என்ற தலைப்பில் கூகுள் மீட் செயலி மூலம் நடைபெற்றது. துறையின் தலைவர் முனைவர் கு.க.கவிதா, உதவிப் பேராசிரியர் முனைவர் த.ராகேஷ் சர்மா ஆகியோர் இக்கருத்தரங்கினை ஒருங்கிணைத்து நடத்தினர்.



துறைத்தலைவர் வரவேற்புரையாற்ற, புலத் தலைவர் முனைவர் க.சங்கர் வாழ்த்துரை வழங்கினார். பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் கடல்சார் அறிவியல் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் என். மனோகரன் “கடல் பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் அதன் பாதுகாப்பு” என்ற தலைப்பில், முதல் கருத்துரையினை வழங்கினார். தொடர்ச்சியாக, சென்னை இந்துஸ் தான் கல்லூரியின் உயிர்த் தொழில் நுட்பவியல் துறைத்தலைவர் முனைவர் சி.எலிசபெத் ராணி, “பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாத்தல்: தற்போதைய அச்சுறுத்தல்கள் மற்றும் தீர்வுகள்” என்ற தலைப்பில், சொற்பொழிவு ஆற்றினார். முனைவர் பட்ட ஆய்வாளர், திருமதி. இந்துமதி, நன்றியுரை வழங்கினார். 60 பேர் முழுமையாகப் பங்கேற்ற இந்நிகழ்வு சிறப்பாக நடந்தேறியது.

# காந்தி பிறந்தநாள் விழா

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 2020 அக்டோபர் 2 ஆம் நாள் 151 - ஆவது காந்தி பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, உள்தர உறுதிப்பாட்டு மையத்தின் (IQAC) சார்பில், இணையவழிச் சொற்பொழிவு நடைபெற்றது. தலைமையுரையாற்றிய துணை வேந்தர், காந்தியத்தின் அறவழிப் போராட்டம், மெய்யியல் கருத்துக்கள் சிறப்புமிக்கவை என்று கூறினார். மேலும் காந்தியடிகளின் அகிம்சை, உண்மை, ஆகிய அடிப்படை கோட்பாடுகள் இக்காலகட்டத்திற்கு அவசியமான கருத்தாக்கங்கள் என்று கூறினார். இவ்விழாவில், காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக, காந்தி ஆராய்ச்சி மையத்தின் உதவிப்பேராசிரியரும், காந்தி நிர்மாண் திட்ட அருங்காட்சியக இயக்குநருமான முனைவர் த.ரவிச்சந்திரன் "இன்றைய காலத்தில் காந்தியத்தின் தேவை" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். அவர் காந்தியின் போராட்டம், தென்ஆப்பிரிக்காவில் எவ்வாறு தொடங்கியது என்பதையும், காந்தியின் போராட்ட வரலாறு பற்றியும், தமிழகத்துடனான காந்தியின் தொடர்புகளையும் விளக்கினார். எவ்வாறு




காந்தி இந்தியா விடுதலைபெற்ற பின்னர், எந்த பதவியையும் விரும்பாமல் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார் என்பதையும் எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் உள்தர உறுதிப்பாட்டு மையத்தின் இயக்குநர் பேராசிரியர், சு.கவிதா வரவேற்புரையாற்ற, பதிவாளர் (பொறுப்பு) பேராசிரியர் கு.சின்னப்பன் வாழ்த்துரை வழங்கினார். முனைவர் வீ.செல்வகுமார் நன்றியுரைத்தார். இந்நிகழ்வில் பல்கலைக்கழக ஆசிரியர்களும், மாணவர்களும் பங்குபெற்றனர்.

# தமிழ்ச் சமூக வரலாற்று வரைவியல் சிறப்பு உரையரங்கம்

நாட்டுப்புறவியல் துறையின் சார்பாக, ஐந்து நாள்கள் இணையவழி தமிழ்ச் சமூக வரலாற்று வரைவியல் சிறப்பு உரையரங்கம் நடைபெற்றது. 01.09.2020 அன்று, துணைவேந்தர் தொடங்கி வைத்துத் தலைமையுரை ஆற்றினார். துறைத் தலைவர் பேரா. இரா. காமராசு வரவேற்புரை மற்றும் அறிமுகவுரை வழங்கினார். சமூக வரலாறு எனும் பொருண்மையில், நாட்டார் வழக்காற்றியல் அறிஞர் முதுமுனைவர் ஆ.சிவசுப்ரமணியன் பொழிவு ஆற்றினார். 02-09-2020 அன்று 'மொழி வரலாறு' எனும் பொருண்மையில் மொழியியல் அறிஞர் செ. வை. சண்முகம் சிறப்புரையாற்றினார். 03.09.2020 அன்று 'தமிழிசை வரலாறு' எனும் பொருண்மையில் இன்னிசை ஏந்தல் நா.மம்மது அவர்களும் 04.09.2020 அன்று 'இலக்கிய வரலாறு' எனும் பொருண்மையில் பேரா வீ.அரசு அவர்களும் சிறப்புரையாற்றினர். 05.09.2020 அன்று தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் பேரா. கு. சின்னப்பன் தலைமையுரை ஆற்ற, மானிடவியல் அறிஞர் பேரா. பக்தவச்சல பாரதி, 'பண்பாட்டு வரலாறு' பற்றிய சிறப்புரையை வழங்கினார். தமிழ்ச்சமூக வரலாற்று வரைவியல் பற்றிய இந்தச் சிறப்பு உரையரங்கத்தை நாட்டுப் புறவியல் துறை உதவிப்பேராசிரியர்கள் முனைவர் சீ. இளையராஜா, முனைவர் நா. மாலதி ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

# கற்றல், கற்பித்தல் மற்றும் நிகழ்த்தல் நோக்கில் நாடகக்கல்வி - இணையவழிச் சான்றிதழ் வகுப்பு

கலை என்பது, மக்களின் வாழ்வியலோடும் வாழ்க்கை வட்டச் சடங்குகளோடும் வாழ்வியல் நடைமுறைகளோடும் முகிழ்த்து நிற்பதாகும். நமது குடும்பம் என்கின்ற அமைப்பை, குடும்பம் சார்ந்த உறவுகளை, அது சார்ந்த நம்பிக்கைகளை, அந்த நம்பிக்கை சார்ந்த பழக்க வழக்கங்களை அது சார்ந்த நெறிமுறைகளை நம் கலைகளே நமக்குக் கற்றுக் கொடுக்கின்றன, காத்து நிற்கின்றன. நமக்கான அடையாளங்களைக் கொடுக்கின்றன. இந்த அடையாளங்களையும் வாழ்வியலையும் தமிழ்ச் சமூகம் தொலைத்துக் கொண்டிருக்கையில், அவற்றை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு நாடகக்காரர்கள் கையில்தான் உள்ளது என்பதை உணர்ந்து, தமிழ் நாடகக் கலையின் வரலாற்றையும் அதன் வளர்ச்சிப் போக்குகளையும் அதற்கு வித்திட்ட கலைஞர்களையும் செயற்பாட்டாளர் களையும் அவர்களின் பங்களிப்புகளையும் அறிமுகப்படுத்துவது அவசியம் என்ற நிலையில், தமிழ்ப் பல்கலைக்கழக நாடகத்துறையும் கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறையும் இணைந்து, 'கற்றல் கற்பித்தல் மற்றும் நிகழ்த்தல் நோக்கில் நாடகக்கல்வி' என்னும் ஏழுநாள் இணையவழிச் சான்றிதழ் வகுப்பினை 11.05.2020 முதல் 17.05.2020 வரை நடத்தின. துணைவேந்தர் 11.05.2020 காலை 09.50 மணிக்கு, நாடகத் துறையின் வலையொலி ஒளியலை வரிசையில் நேரலையில் தோன்றி, தொடங்கி வைத்தார். முதல் நாள் நிகழ்வில் பேரா. கோ. பழனி, 'பழமரபு நாடகங்கள்' குறித்தும் இரண்டாம் நாள் நிகழ்வில் நாடகவியலாளர் பிரளயன் 'வீதி நாடகங்கள்' குறித்தும் மூன்றாம் நாள் நிகழ்வில் கருணாபிரசாத், 'நவீன நாடகங்கள்' குறித்தும் நான்காம் நாள் நிகழ்வில் நாடகவியலாளர் முனைவர் எம்.எஸ்.காந்திமேரி 'குழந்தைகள் நாடகங்கள்' குறித்தும் ஐந்தாம் நாள் நிகழ்வில் பேரா.வீ.அரசு 'கல்விப்புலத்தில் அரங்கம்' குறித்தும் ஆறாம் நாள் நிகழ்வில் பேரா. கு. சின்னப்பன் 'தலித்திய நாடகங் கள்' குறித்தும் ஏழாம் நாள் நிகழ்வில் பேரா. அ. மங்கை 'பெண்ணிய நாடகங்கள்' குறித்தும் உரை ஆற்றினர். இச்சான்றிதழ் வகுப்பில் பங்கேற்க 7300-பேர் பதிவு செய்திருந்தனர் என்பதும் 4000-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் என்பதும் பின்னூட்டம் அனுப்பிய 3953 பேருக்கு இணைய வழிச் சான்றிதழ் அனுப்பப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் சான்றிதழ் வகுப்புகளுக்கெல்லாம் முன்மாதிரியாக முன்னெடுக்கப்பட்ட இச்சான்றிதழ் வகுப்பினை, நாடகத்துறைத் தலைவர் முனைவர் பெ.கோவிந்த சாமி, கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறைத்தலைவர் முனைவர் கு.சின்னப்பன் ஆகியோர் ஒருங்கிணைந்து நடத்தினர்.



# கொரோனா தீ நுண்மிப் பேரிடர்க் காலத்தில் நிகழ்த்தப் பெற்ற இணையவழி உரைத்தொடர்

| கொரோனா தீ நுண்மிப் பேரிடர்க் காலத்தில் நிகழ்த்தப் பெற்ற இணையவழி உரைத்தொடர் | | | |
|---|---|---|---|
| வ.எண் | நாள் | பொருண்மை | பொழிவாளர் |
| 1 | 21-04-2020 | ஆய்வு நெறிமுறைகள் | பேரா. பா. மதிவாணன், மேனாள் பேராசிரியர், தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம். |
| 2 | 24-04-2020 | களப் பயணம் | பேரா. ஆறு. இராமநாதன், மேனாள் பேராசிரியர், நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம். |
| 3 | 27-04-2020 | நாடோடிப் பண்பாடு | பேரா. ஓ. முத்தையா, தமிழியல்துறை, காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம். |
| 4 | 29-04-2020 | சசூரும் அமைப்பியலும் | பேரா. சி. சண்முகம், மேனாள் பேராசிரியர், மொழியியல் துறை, பாரதியார் பல்கலைக்கழகம். |
| 5 | 01-05-2020 | பின்நவீனத்துவம் | பேரா. செயராமன், தமிழியல் துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம். |
| 6 | 04-05-2020 | கடந்து போவோம் கொரோனாவையும் | மருத்துவர் கு. சிவராமன், சென்னை. |
| 7 | 06-05-2020 | சுற்றுச்சூழல் ஆய்வுகள் | பேரா. கண்ணன், காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. |
| 8 | 08-05-2020 | புவியின் அமைப்பு | அறிவியலறிஞர் முனைவர் த. வி. வெங்கடேஸ்வரன், புதுதில்லி. |
| 9 | 11-05-2020 | விளைவுசார் கல்வித் திட்டக் கட்டமைப்பு | பேரா. ஜெயக்குமார், மேனாள்பேராசிரியர், மொழியியல் துறை, பாரதியார் பல்கலைக்கழகம். |
| 10 | 13-05-2020 | சங்க காலத் தொல்லியல் | பேரா. கா. ராஜன், மேனாள் பேராசிரியர், புதுவை மத்தியப் பல்கலைக்கழகம். |
| 11 | 15-05-2020 | மானுடவியல் அறிமுகம் | பேரா. ஆ. செல்லபெருமாள், புதுவை மத்தியப் பல்கலைக்கழகம். |
| 12 | 18-05-2020 | அருங்காட்சியகவியல் | முனைவர் சி. மகேஸ்வரன், கோவை. |
| 13 | 20-05-2020 | இலக்கிய இனவரைவியல் | பேரா. ஞா. ஸ்டீபன், பேராசிரியர், தமிழியல் துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம். |
| 14 | 22-05-2020 | அடித்தள மக்கள் வரலாறு | முதுமுனைவர் ஆ. சிவசுப்ரமணியன், தூத்துக்குடி. |
| 15 | 27-05-2020 | அண்மைக்கால நிலவுசார் ஆராய்ச்சிகள் | பேரா. எஸ். அன்பழகன், பெரியார் பல்கலைக்கழகம். |
| 16 | 29-05-2020 | சமூக மேம்பாடும் பாலின சமத்துவமும் | பேரா. ந. மணிமேகலை, மகளிரியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம். |
| 17 | 03-06-2020 | தமிழியலின் கதை | பேரா. வீ. அரசு, மேனாள் பேராசிரியர், தமிழியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகம். |
| 18 | 05-06-2020 | பின்னைக் காலனியம் | பேரா. பா. ஆனந்தகுமார், தமிழியல் துறை, காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம். |
| 19 | 08-06-2020 | ஆய்வேடும் ஆய்வுக் கட்டுரையும் | பேரா. எம். செந்தில்குமார், அரசினர் கலைக் கல்லூரி, கோவை. |
| 20 | 15-06-2020 | இந்திய மெய்யியலின் பன்முகத்தன்மை | பேரா. ஆர். முரளி, மதுரை. |
| 21 | 19-06-2020 | கீழடி அகழாய்வு | அமர்நாத் ராமகிருஷ்ணன், இந்தியத் தொல்லியல் கழகம், கோவா. |
| 22 | 22-06-2020 | பெண்மைய இலக்கிய வெளி | பேரா. அ. மங்கை, சென்னை. |
| 23 | 26-06-2020 | தமிழ்த் திரைப்பட நகைச்சுவையின் வரலாறு | பேரா. சுந்தர்காளி, தமிழியல் துறை, காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம். |
| 24 | 29-06-2020 | தமிழ் மெய்யியல் | பேரா. ந. முத்துமோகன், மதுரை. |
| 25 | 03-07-2020 | தொல் பழங்காலப் பண்பாட்டு வழக்காற்றியல் | பேரா. ச. இரவி, தமிழியல் துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர். |

பழங்குடி மக்கள் ஆய்வுமையம் சார்பாக, செப்டம்பர் மாதம் - 2020 முதல் தொடங்கப்பட்ட இணையவழி உரைத்தொடர் "நாடோடிப் பழங்குடி மக்களின் வழக்காறுகள் (Nomadic Tribal Lore)" என்ற பொருண்மையில் மாதந்தோறும் மூன்றாவது புதன் மற்றும் வியாழக்கிழமை ஆகிய இரண்டு நாள்களில் மாலை 6 மணி முதல் 7 மணி வரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.




16.09.2020 அன்று நடைபெற்ற உரையரங்கில், தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் கி.கருணாகரன் "தமிழகப் பழங்குடி மக்களது வழக்காறுகள் - இன்றைய சூழலுக்கு ஏற்ற அணுகு முறைகள்" என்ற தலைப்பில் பேசியதாவது: தமிழகத்தில் 40 - க்கும் மேற்பட்ட வெவ்வேறு பழங்குடிகள் வசித்து வருகின்றனர். இருளர், காடர், குறும்பர், தோடர், காட்டுநாயக்கர், கோத்தர் போன்றோர்கள் பெரும்பான்மைப் பழங்குடிகளாகக் கருதப்படுகிறார்கள். தமிழ் நாட்டில் 30 மாவட்டங்களில் பழங்குடிகள் வாழ்கிறார்கள். பெரும்பாலோருடைய மொழிகள் தமிழுடன் நெருங்கிய தொடர்புடையவை; திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. இன்னும் பழங்குடி மக்கள் பற்றிய முறையான ஆய்வுகளை பின்நவீனத்துவம்,மொழியியல், அமைப்பியல் மற்றும் சமூகம் சார்ந்த அனுகுமுறைகளில் மேற்கொண்டால் மேலும் சிறப்பானதாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுப் பொழிவாற்றினார்.

காந்தி கிராம, கிராமியப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் முனைவர் ஒ.முத்தையா 17.09-2020 அன்று "சூழலியல் நோக்கில் பழங்குடிகள் வாழ்விடம்" என்ற தலைப்பில் உரையாற்றிய நிகழ்வில், ஆய்வாளர்கள் சிலர், தோடர்களைத் தொதவர் என்றும் குறிப்பிடுகின்றனர். தமிழ்நாட்டில், நீலகிரி மாவட்டத்தில் சுமார் 1,600 க்கும் மேற்பட்ட 'தொதவம்' என்ற மொழியைக் பேசக்கூடிய சிறு பழங்குடி இனத்தவர் வசித்து வருகின்றனர். பெரும்பாலும் இவர்கள் வாழ்க்கை எருமை மாடுகளைச் சுற்றியே அமைகின்றது. இவர்களுடைய வாழ்க்கை வட்டச் சடங்குகளிலும் எருமை மாடு முக்கியப் பங்கு வகிப்பதால் இவர்கள் எருமையின் குழந்தைகள் என தங்களை அழைத்துக் கொள்கின்றார்கள். இவர்கள் குடியிருக்கும் வீடு, கோயில் போன்றவை அரைவட்ட வடிவமானவை. வீடுகளின் நுழைவாயில் குனிந்து செல்லும் அளவிற்கு மிகமிகச் சிறியதாகக் காணப்படுகிறது. கடும் குளிரைத் தவிர்ப்பதற்கும், மழைக் காலங்களில் நீர் தங்காமல் இருப்பதற்கும் மற்றும் விலங்குகள் உள்நுழையாமல் தடுப்பதற்கும் இந்த மாதிரியான வீடுகள் அமைக்கப் பட்டுள்ளன. தோடர்கள் பேசும் தோடா மொழி, மிக விரைவாக அழிந்து வரும் மொழிகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ளதாக யுனெஸ்கோ தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

21.10.2020 அன்று, கோயம்புத்தூர் கொங்குநாடு கலை அறிவியல் கலைக் கல்லூரி தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ச. அரிச்சந்திரன் "பழங்குடி சமூகத்தில் பெண்கள்" என்ற தலைப்பில் இருளர் பழங்குடி மக்களில் பெண்கள் பெரிதும் மதிக்கப் படுகின்றனர். பெண்களின் சம்மதத்தின் அடிப்படையில் கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு. பெரும்பாலும் பழங்குடி மக்களின் குல தெய்வங்களில் கன்னிமார் தெய்வம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. காரணம் இவர்கள் தாய்வழிச் சமூகத்தினை இன்றளவும் பின்பற்றி வருகின்றனர் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும் என்று சான்றாதாரம் தந்து விளக்கினார்.

22.10.2020 அன்று தாய்லாந்து புத்த துறவி சமண அரிய பிரம்மா "மானிடவியல் நோக்கில் தாய்லாந்து பழங்குடிகள்" என்ற தலைப்பில், தாய்லாந்தில் வாழும்

1. Akka Tribe - (பர்மாவிலிருந்து தாய்லாந்திற்கு வந்தவர்கள்)
2. Hmonk Tribe -(சீனாவிலிருந்து தாய்லாந்திற்கு வந்தவர்கள்)
3. Karen Tribe - (சீனாவிலிருந்து பர்மாவிற்கு வந்து சில தலைமுறைகள் தங்கிப் பின்பு தாய்லாந்திற்கு வந்தவர்கள்) எனப் பகுத்தாராய வேண்டியிருக்கிறது, என்றார் .

இவ்வாறாக, பரவலான ஆய்வுக்களம் நோக்கிய பயணிப்பாகப் பழங்குடி மக்கள் ஆய்வுமைய உரைத் தொடரைத் தொடர்ந்து நடத்த திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டார், ஒருங்கிணைப்பாளர் முனைவர் சிவராமன்.

# தமிழி வாழ்த்துகிறது...

## தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் புதிய ஆட்சிக்குழு உறுப்பினர் நியமனம்



பேரா. அரங்க. பாரி

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் முனைவர் அரங்க. பாரி, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தர், தமிழ் வளர்ச்சி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் சார்பாக, தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினராக மூன்று ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 17.02.2020 அன்று பொறுப்பேற்றார்.

---

## பேரவை உறுப்பினர்கள் நியமனம்



திரு.சி. வி. சேகர்

திரு. சி. வி. சேகர், சட்ட மன்ற உறுப்பினர், (பட்டுக் கோட்டைத் தொகுதி), திரு. டி. ஆர். பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர், (மன்னார்குடித் தொகுதி) ஆகியோர், தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவைக்குத் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து முறையாக நியமனம் செய்யப் பட்டுள்ளனர். தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவையில் இவர்களது பதவிக்காலம் 07.05.2020 முதல் மூன்றாண்டுகள் அல்லது சட்டமன்ற உறுப்பினர் பதவிக்காலம் இவற்றுள் எது முந்தியதோ அதுவரை, பேரவை உறுப்பினர்களாகப் பணியாற்றுவார்கள்.



திரு.டி. ஆர். பி. ராஜா

---

## பேரவை உறுப்பினர்கள் நியமனம்

தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவைக்கு முனைவர் க.பசும்பொன்,(ஆய்வறிஞர், மனிதவள மேம்பாட்டுத் துறை மைசூர்), முனைவர் இரா. சரண்யா, (பேராசிரியர் மற்றும் இயக்குநர் மொழியியல் உயராய்வுமையம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) மற்றும் முனைவர் பெ.செல்வக்குமார், (இணைப்பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை) ஆகிய மூவரும் தமிழ்ப் பல்கலைக்கழக இணைவேந்தராகிய மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களால் பேரவை (Senate) உறுப்பினர்களாக 09.10.2020 முதல் மூன்றாண்டுக் காலத்திற்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.



முனைவர். க. பசும்பொன்



பேரா. இரா. சரண்யா



பேரா. பெ. செல்வக்குமார்



தமிழ்ப்பல்கலைக் கழகம்,தஞ்சாவூர்
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ்நாடு

## வாழ்த்து...

இன்று (31.07.86) மாலை ஐந்து மணியுடன் என் பொறுப்பை ஒப்புவித்து
ஆய்விற்காக நான் திருவனந்தபுரம் செல்கிறேன்.
பரதன் பாதுகாத்த பாதுகையைப் போல்
பிறர்கையில் மகிழ்ச்சியுடன் விட்டுச் செல்லும் உணர்வு ஏற்படுகிறது.
கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களனைவருடன் உழைத்துத்
தமிழ்ப் பல்கலைக்கழகத்தைப் படிப்படியாக உருவாக்குவதில்
ஒரு பெருமிதம் எனக்கு இருந்தது.
இணைந்த செயற்பாடும்,உறவு முறையும், தமிழுக்காகச் செய்கின்றோம்
என்ற மனநிலையும் இந்த வளர்ச்சிக்குக் காரணம்.
இவற்றிற்கு நான் நன்றி சொல்ல வேண்டும்.
தமிழ்ப் பல்கலைக்கழகம், பிற பல்கலைக்கழகங்கள் போன்ற ஒன்றன்று.
இது உயராய்வு மையம். இங்கே அறிவுசான்ற சிலரே இடம் பெற முடியும்.
இடம் பெற்றவர்களும் தமது அறிவாற்றலை வெளிப்படுத்தத்
தொடர்ந்து தம்மைத் தாமே தேர்வுக்குட்படுத்திக் கொள்ள வேண்டும்.
அதைப்போன்றே அலுவலகமும் சிறப்பாகச் செயற்பட வேண்டும் .
என்று ஆய்வின் தரம் குறைகிறதோ
அன்று தமிழ்ப் பல்கலைக்கழகம் தளர்ந்து விடும். நல்கைகள் குறையும் ;
பொருள் முட்டுப்பாடு தோன்றி,
தமிழ்ப் பண்பாட்டைக் காத்து வளர்க்கும்
இந்த நிறுவனம் நிலை குலைந்துவிடும்.
இதனை ஒவ்வொருவரும் நினைவிற் கொள்வது நன்று.
இதன் வாழ்வும், வளர்ச்சியும்
ஒவ்வொரு ஆய்வாளர்/ அலுவலர் கையில் எப்போதும் இருக்கும்.
'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்ற புறநானூற்று அடிகள்
நமக்கு மனப்பாடம்.
'அறநெறி தவறாமல் செயல்படுவதே பெரும் அரச வெற்றி' என்று
அசோகன் கல்லெழுத்தில் கூறியதும் நமக்கு நினைவிருக்கலாம்.
தமிழ்ப் பல்கலைக்கழக வளர்ச்சியைத் தமிழர் அனைவரும்,
ஏன் பிற மாநிலத்தார் கூட உன்னிப்பாகக் கவனித்து வருவர்.
அயல் மாநிலத்தில் வாழ்ந்த தமிழ் மகன் என்ற முறையில்
அகலவிருந்து பார்த்து
உங்கள் வளர்ச்சியை என் மனம் வாழ்த்தும்.
தளர்ச்சியிருப்பின் என்முகம் வாடும்.
அன்றுள்ள பல்கலைக்கழக அதிகாரிகள் அனுமதித்தால்
நான் காலமான பின் என்னுடற் சாம்பலின் இம்மியளவைத்
தஞ்சைத் தென்வளாகத்தில் ஒரு மூலையில் என் கண் முன்னே
வளர்ந்த மரத்தடியிலும்,
காஞ்சி,உதகை,மண்டப மையங்களில் வளரும் மரத்தடியிலும் புதைத்திட
என் குழந்தைகள் அனுப்புவர். புதைத்திடுக.
நீங்களனைவரும் வளமுற வாழ வாழ்த்துகிறேன்.

(வ.அய்.சுப்பிரமணியம்)
துணைவேந்தர்
31.07.1986

முதல் துணைவேந்தர்
முதுமுனைவர் **வ.அய். சுப்பிரமணியம்**
18·02·1926 – 29·06·2009